# நமக்கு வேண்டியது எது?
# சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா?

## (Swaraj to whom?)

சுயராஜ்யம் யாருக்கு?

★

ஆசிரியர்:
தோழர் M. சிங்காரவேலு B. A., B. L.

★

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.
1947,
விலை அணா 6.

பேராசிரியர் முனைவர் இரா. இளவரசு
நூலக நூல்கள்
நூற்கொடை : பேராசிரியர் இரா. வேலம்மாள்
பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை

# நமக்கு வேண்டியது எது?
# சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா?

## (Swaraj to whom?)

★

ஆசிரியர்:
தோழர் M. சிங்காரவேலு B. A., B. L.

★

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.
1947,

Tamilan Press, Erode.

# முகவுரை

40கோடி மக்களைக்கொண்ட இந்தியாவென்ற உபகண்டம் பல்வகையானும் சீரழிவுற்று எடுப்பார் கைப் பிள்ளையாகப் பன்னெடுங் காலமாகவிருந்து வருகின்றது. இந்நிலை ஏற்படுவதற்குக் காரணம் என்ன? இந்நிலை யை மாற்றத்தான் வழி என்ன? என்பனபோன்ற கேள்வி கள் எழுச்சியின் உருவங்களாகிய இளைஞர்களுக்கு எழு வது இயல்புதான்.

இந்நாட்டில் பிறப்பினால் உயர் தாழ்வு. 'பார்ப்பன னாகப் பிறந்த காரணத்தாலேயே ஒருவன் பல்லக்கில் நாலுபேர் சுமந்துசெல்ல ஊர்வலம் வரலாம்; அவன் பாதங் களைக் கழுவியநீரைப் பாமரமக்கள் பருகலாம்' என்ற நிலையும், 'பறையனாகப்பிறந்த காரணத்தால் ஒருவன் காலம் முழுவதும் கடும்வெயிலென்றும், பெருமழையென் றும் பாராது உழைத்தே தீரவேண்டும்; ஆனால் அவ் வுழைப்புக்குத்தக்க ஊதியமவனுக்கில்லை' என்றநிலையும் புண்ணியபூமி என்று போற்றப்படும் இந்நாட்டில் காட்சி யளிக்கின்றன.

ஒருவன் செல்லுமிடத்திற்கு மற்றொருவன் செல்லு தல் குற்றம். ஒருவன் உண்ணும் உணவை வேறொருவன் காண்டல் அதனினும் குற்றம். ஒருவனைப் பிரிதொரு வன் தீண்டல் பெருங்குற்றம். ஒருவன் ஊரார் உழைப் பைக்கொண்டு, உந்தியை வளர்த்துக்கொண்டு, உப்

பரிக்கையின்மேல் பெண்டுபிள்ளைகளுடன் உல்லாச வாழ்வு வாழலாம்; உழைப்புக்கும் அவனுக்கும் ஒரு காததூரம்; காரணம் அவன் பாடுபடும் சாதியில் பிறக்கவில்லையென்பதுதான். ஒருவன் காலம் முழுவதும் உழைக்கவேண்டும்; ஆனால் அவன் உழைப்புக்குத்தக்க ஊதியம் கேட்பது தவறு; காரணம் அவன் உயர்ந்த சாதியினருக்கு உழைக்கவே உழைப்பாளி சாதியிற் பிறந்திருக்கிறான் என்பதுதான்.

உலகிற்கிடைக்கும் உயர் பொருள்களெல்லாம் ஒரு கூட்டத்தார்க்குத்தான் உரியன. அவ்வுயர் பொருள்களை உண்டாக்குகின்றவன் அவற்றைத் துய்ப்பதற்குஉரிமையில்லை. ஒருவன் மாடமாளிகைகளைக் கட்டுகின்றான்; ஆனால் அவன் மாட்டுக்கொட்டகையில்தான் தன் மனைவி மக்களுடன் வாழ்கின்றான். அழகான ஆடையை ஆக்குகின்றான்; ஆனால் அவன் அணிவது கந்தல்தான். உழுது பயிரிட்டு உணவுப் பொருள்களை உண்டாக்குகின்றான்; ஆனால் அவன் உண்பது அரைவயிற்றுக்கும் போதாது.

ஒருவன் நாள்முழுவதும் அதிகாரிகளின் கட்டளைப்படிப் பணிந்து உழைக்கின்றான்; ஆனால் அவனுக்கு ஊதியம் மாதம் ஒன்றுக்கு இருபது ரூபாய்தான். ஒருவன் உட்கார்ந்த இடத்திலேயேயிருந்து ஒரு தாளில் கையெழுத்து மாத்திரம் போடுகின்றான்; அவன் பெறுவதோ மாதம் ஒன்றுக்கு மூவாயிரம் ரூபாய்.

ஒரு கூட்டத்தார் பரம்பரை பரம்பரையாகப் படித்தவர்களாகவே யிருக்கின்றனர். ஏனையோர் பரம்பரை

பரம்பரையாகப் பாமரர்களாகவே யிருக்கின்றனர். படிப்பு ஒரு கூட்டத்தாருக்கே என்று பேசப்படுகின்றது. ஏனைய கூட்டத்தார் அதைப்பற்றிச் சிந்திப்பதில்லை; சிந்தித்தாலும் அவர்கள் போதிய கல்விகற்க வசதி அளிக்கப்படவில்லை. நாகரீக உலகத்திற்கேற்ப ஒரு கூட்டத்தார் உயர்ந்துகொண்டு செல்கின்றனர். ஆனால் ஏனையோர் அவர்களுக்கு அடிமைகளாகவே இருந்து வருகின்றனர்.

அரசியலிலும் ஒரு கூட்டத்தார் (பணக்காரர்களும், பார்ப்பனர்களும்) செல்வாக்குப்பெற்றுத் தங்கள் விருப்பம்போல் ஏனையோரை ஆட்டிவைக்கத் திட்டம் தீட்டுகின்றனர். அதற்கு ஆதரவளிக்குமுறையில் பாமரமக்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

ஒருவன் மதத்தின் பெயரைச்சொல்லி மக்களை மடையர்களாக்குகின்றான். மற்றொருவன் கடவுளின் பெயரைச் சொல்லி மக்களைக் கயவர்களாக்குகின்றான். வேறொருவன் சாத்திரத்தின் பெயரைச் சொல்லி மக்களை அடிமைகளாயாக்குகின்றான். பிறிதொருவன் புராணத்தின் பெயரைச்சொல்லி மக்களைப் புளுகர்களாயாக்குகின்றான்.

மக்கள் தொகுதியினருள் சரிபகுதியினராகவுள்ள பெண்களின் உலகம் கண்ணீர்க்கடலாகவுள்ளது. கணவனையிழந்த காரிகை, கட்டழகுவாய்ந்த இளம் நங்கையாக விருப்பினும் உலக இன்பத்தில் பங்குகொள்ள உரிமையில்லை. 15 வயது கன்னிப்பெண் 60வயது கிழவனுக்கு வாழ்க்கைத் துணைவியாக ஆக்கப்பட்டு வாழ்

நாள் முழுதும் நடைபிணமாக இருக்கிறாள். பெண்ணிற்குச் சொத்துரிமையில்லை; வெளியில் ஆண்களைப் போல் உலவவும் உரிமையில்லை. பெண்கள் தங்களை ஆடை அணிகலன்களால் அலங்கரித்துக்கொண்டு ஆடவர்களின் களியாட்டக் கருவிகளாக, போகப்பொருள்களாக இருக்கவேண்டும். ஆடைஆபரணம் அணிந்து கொள்ள வசதியில்லா வனிதையர்கள் தங்கள் கொழுநர்களின் கொடுமைக்குட்பட்டுத்தான் வாழவேண்டும். ஒரே சொல்லில் சொல்லவேண்டுமானால் பெண்கள் அடிமைகளாய் வாழவேண்டும்.

நம் நாட்டில் நடைமுறையில் உள்ள இன்னோரன்ன குறைபாடுகளைக் கூறிக்கொண்டே போகலாம். இக்குறைபாடுகள் இருக்கின்ற காரணத்தால்தான் இந்தியாவென்ற உபகண்டம் பன்னெடுங்காலமாக எடுப்பார் கைப்பிள்ளையாக இருந்து வருகின்றது. இக்குறைபாடுகள் நீங்கினால் தான் இந்தியாவென்ற உபகண்டம் உரிமைபெற்றதாய் ஆக முடியும். இக்குறைபாடுகள் உண்டாவதற்குக் காரணம் என்ன?

பொதுவாக நாட்டிலே ஏய்க்கும்கூட்டம், ஏய்க்கப் படும் கூட்டம் என இரு கூட்டங்கள் இருந்து வருகின்றன. ஏய்க்கும் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் எண்ணிக்கையில் மிகச்சிலர். ஆனால் ஏய்க்கப்படும் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் எண்ணிக்கையில் மிகப்பலர். மிகப் பலர் மிகச்சிலரால் ஏய்க்கப்படுவதின் காரணம் என்ன?

நாட்டிலே நடைமுறையிலே உள்ள சட்டதிட்டங்கள், சமூகக் கட்டுப்பாடு, கல்வி, அரசியல் முதலியன

ஏய்க்கும் கூட்டத்தினர், ஏய்த்தல் தொழில் செய்வதற்கு ஏற்றவண்ணம் அமைந்துள்ளன. காரணம் ஏமாந்த காலத்தில் ஏய்க்கும் கூட்டத்தினர் தங்கள் நன்மைக்கு ஏற்ப மேற்கூறிய யாவற்றையும் ஏற்படுத்திவிட்டனர், சாத்திரமும், உயர்ந்தசாதித் தன்மையும் அவர்கள் விரும்பியவாறெல்லாம் சமுதாயத்தை அமைப்பதற்கு உறு துணையாயிருந்தன. அன்று அவர்கள் அமைத்த அமைப்புத்தான் இன்று சமூதாயம் சீர்கெட்டநிலையெய்தி யிருப்பதற்குக் காரணமாயிருக்கின்றது. அக்கொடிய அமைப்புமுறை மாறினால்தான் சீரழிவுற்ற சமூதாயம் சீர்பெறும். அங்ஙனம் சீர்பெற்றால்தான் இன்று சமுதாயத்தில் காணப்படும் குறைபாடுகள் நீங்கும்.

சீரழிவுற்ற சமுதாயம் சீர்படுவதற்கு நமது காலஞ் சென்ற தோழர் மா. சிங்காரவேலனார் நல்லதொரு வழியைக் காட்டியுள்ளார். குறைபாடுகள் அனைத்தும் ஒழிந்து, மக்கள் மக்களாய், எல்லோரும் ஓர் நிலையினராய், இன்பமாய் வாழ 'நமக்கு வேண்டியது சுயராஜ்யமா, சமதர்ம ராஜ்யமா' என்ற நூலில் வழிகாட்டியுள்ளார்.

உலகின் கண்ணுள்ள எல்லா நாடுகளும் உண்மை உரிமையுடன் வாழவேண்டுமானால் சமதர்ம அரசியலில் தான் முடியுமென்பதைத் தக்க காரணங்காட்டி விளக்கியுள்ளார். சமதர்மநாட்டைத் தவிர்த்து ஏனைய எல்லா நாடுகளிலும் எந்தவகை அரசியல் ஆட்சியிலும் மேற்கூறிய குறைபாடுகள் மலிந்து காண்பதன்றி, மேன் மேலும் குறைபாடுகள் வளர்ச்சியுறும் என்பதை நன்கு காட்டியுள்ளார்.

இப்பொழுது இந்தியாவில் பேசப்பட்டுவரும் சுய

ராஜ்யத்திலும் இக்குறைபாடுகள் ஒழிவதற்குரிய நல்ல தொரு திட்டம் இல்லை என்பதையும், சுயராஜ்யம் என்பது பாட்டாளி மக்களைச் சுரண்டுவதற்குப் பணக்காரர்களாலும், முதலாளிகளாலும், உயர்ந்த சாதியினராலும் வகுக்கப்படும் திட்டம் என்பதையும், காந்தியார் கோரும் இராமராஜ்யம் குறைபாடுகளைப் பெருக்குவதற்கு இடமாய்த்தான் இலங்குமென்பதையும், பணக்காரர்களின் செல்வாக்கைத்தான் பெருக்குமென்பதையும், சமதர்ம அரசியல் திட்டந்தான் இந்தியா என்ற உபகண்டத்திற்கு உண்மை விடுதலை உண்டாக்குமென்பதையும், காரணங்காட்டி விளக்கியுள்ளார்.

எனவே 'நமக்குவேண்டியது சுயராஜ்யமா அல்லது சமதர்மராஜ்யமா' என்ற நூல் இந்தியாவில், சிறப்பாகத் திராவிட நாட்டில் வருங்கால அரசியலை அமைப்பதற்கு வீறுகொண்டெழும் வீரஇளைஞர்களுக்கு நல்லதொரு வழிகாட்டியாயிருக்குமென்பது நமது கருத்து.

குடி அரசு பதிப்பகத்தார்.

# நமக்கு வேண்டியது எது?
# சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா?
# (Swaraj to whom?)

## சுயராஜ்யம் யாருக்கு?

### முதல் அத்தியாயம்.

★

### சுயராஜ்யமும், தேசியமும்.

நமக்கு வேண்டியது சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா? இந்த பிரச்னைக்குக் கொடுக்கும் விடையில்தான், 200 கோடி உலகமக்களின் சுகாசுகங்கள் அடங்கியுள்ளன. இந்த விடையில்தான், 40-கோடி இந்திய மக்களின் சுகாசுகங்கள் அடங்கியுள்ளன. It is in the solution of this problem, whether what is wanted is Swaraj or Socialist Raj, lies the happiness of misery of 2000 millions of the human race. It is in answer to this that the happiness or misery of the 400 millions of the Indian people lies. In fact, this is the crux of the Indian Problem:—இதுதான் மனிதப்பூண்டின் முக்கிய பிரச்சினை.

### சுயராஜ்யமேன்றால் என்ன?

உலகில் பண்டைகாலமுதல் வழங்கிவரும் தேசிய ராஜ்யமே சுயராஜ்யமெனப்படும். அது ராமராஜ்யமா யிருந்தாலும் சரி, அல்லது இராவண ராஜ்யமாயிருந்தா

லும் சரி, இவையாவும் சுயராஜ்மே. அல்லது தற்கால பிரெஞ்சு ராஜ்யமானாலும் சரி, பிரிட்டிஷ் ராஜ்யமானா லும் சரி இவையாவும் சுயராஜ்மே. அல்லது மகாத்மா காந்தி கோரும் ராஜ்யமானாலும், தேசபந்துதாஸ் கோறிய ராஜ்யமானாலும் இவைஇரண்டும் சுயராஜ்யமே. உலகிலுள்ள ராஜ்யங்களில், ஒன்றைத்தவிர, அதாவது, ரஷிய சோவியத் ராஜ்யத்தைத் தவிர, மற்றெல்லாம் சுயராஜ்யமெனப்படும்; இந்த சுயராஜ்யங்களில் ஒன்றுக் கொன்று மேல்கீழ் கிடையாது; உயர்வுதாழ்வு கிடையாது; இந்தச் சுயராஜ்யத்தை நடத்துகின்ற திட்டம் குடிஅரசா யிருந்தாலும் (Republican) அல்லது ஜனநாயகஆட்சி (Democracy) யாயிருந்தாலும், அல்லது ஏகாதிபத்திய ஆட்சி (Autocracy) யாயிருந்தாலும், என்ன வகையாக இருந்தபோதிலும், இவையாவும் சுயராஜ்யமே. அல்லது ராஜா அரசாளும் அரசாயிருப்பினும், சக்ரவர்த்தி அரசா ளும் அரசாயிருப்பினும், இவையாவும் சுயராஜ்யமே.

## சுயராஜ்ய இலட்சணம்

இவ்விதமான பல வேறுபட்ட அரசுகளின் முக்கிய குறியென்னவென்றால், பலர் பெயரால் சிலர் அரசுபுரிவதே அதுதான் முக்கியமான தேசிய ராஜ்யத்தின் குறியாகும். இரண்டாவது குறியென்னவெனில், அரசு புரியும் சிலர், தங்களுக்கும் தங்கள் இனத்தாருக்கும் நன்மை உண்டா கும்படி அரசுபுரிவதேயாகும். மூன்றாவது குறியென்ன வெனில், தத்தம் தேசங்களை மற்ற தேசங்களைவிட விசேஷப்படுத்துவது. நான்காவது, சாமானிய குடிகளுக்கு அதாவது 100க்கு 98 பேருக்கு, இந்தத்தேசங்களில் நடத் தப்படும் அரசியலில் நேராகச்செலுத்தவேண்டிய ஆதிக்கம்

ஒன்றுங் கிடையாது. ஐந்தாவது, எங்கள் தேசம் எங்கள் நாடு என்ற மனப்பான்மை குடிகொண்டுள்ளது. இதைத் தான் தேசியமென்று வழங்குவது. பொதுவாக இவ் வைந்து குணங்களும் சுயராஜ்யத்தில் அடங்கியுள்ளன. ஆதலின், எவ்வளவு நல்லெண்ணத்தோடு எவ்வளவு நன்மை பயக்கும் காரியங்களைச் செய்வதாகச் சொன்ன போதிலும், யாதும் விவகாரத்தில் பிரயோஜனப்படுவ தில்லை; யாரும் சுகப்படுவதுமில்லை. 'காக்கைக்குத் தன்குஞ்சு பொன்குஞ்சு' என்பது போல், அரசாங்க வர்க்கத்தினர், (The Governing Class), தங்கள் இனத் திற்கே எல்லா சுகபோகங்களையும் சேர்த்துவைத்துக் கொண்டு, தங்களுக்கு வேண்டிய சட்டதிட்டங்களால், தங்கள் ஆதிக்கத்தைப் பாதுகாத்து வருகின்றார்கள். இந்த மனப்பான்மையால் ஆளுகின்றவர்களுடைய நன் மையைத் தாங்கள் கருதுவார்களே யொழிய, தாங்கள் ஆளும் பிரஜைகளுடைய நன்மையைக் கவனிப்பதில்லை. ஆனபடியால்தான், வேதகாலமுதல் நாளதுவரை உலக பெரும்பான்மை மக்களை, முக்கியமாக இந்திய தேசமக் களைப் பஞ்சமும், தரித்திரமும், இல்லாமையும், நோயும் பகுத்தறிவின்மையும், மூடபக்தியும் அகால மரணமும் வாட்டி வருகின்றன.

## தேசியமும் போரும்

சுயராஜ்யத்தின் அதாவது தேசியத்தின் இலட்சணம் இன்னொன்றுண்டு. பிறருடைய நாட்டைப் பிடிப்பதே தேசியத்தின் இயல்பாகும். உலகில்நடந்த போரெல்லாம் தேசியமென்று சொல்லப்படும் மண்ணாசைக்குத்தான் புரியப்பட்டன. பாரதபோர் மண்ணுக்காகவும் ராமச

யணப்போர் பெண்ணுக்காகவும், மற்றப் போர்கள் யாவும் மண்ணுக்காகிலும் பெண்ணுக்காகிலும் புரியப்பட்டு வந்திருக்கின்றன. கால்டியன் (Chaldean) அசிரியன் (Assyrian) சண்டை முதல் ஈஜிப்ட், 2-ம் உலகப்போர் வரை, எல்லா சண்டைகளும் மண்ணுக்காகவே புரியப்பட்டு வந்திருக்கின்றன. வேதகாலமுதல், நாளதுவரை இந்தியாவில் புரிந்த சண்டைகள் யாவும், இந்த மண்ணுக்காகவே. ஐரோப்பா தேசத்து சண்டைகள்யாவும், தேசியத்தின்பேரால் நடந்தவைகளே. ஆசியா கண்டத்தில் புரிந்த போர்களெல்லாம், இந்த மண்ணைப் பிடுங்குவதற்கே. ஐரோப்பிய ஏழுவருட சண்டை, முப்பது வருட சண்டை, நூறு வருட சண்டை மத்தியகால சண்டை, நெப்போலியன் சண்டை, ரஷிய துருக்கி சண்டை, சீனா ஜப்பான் சண்டை, முதல் மகாயுத்தம் நேற்று நடந்த 2ம் மகாயுத்தம் எல்லா சண்டைகளும்- B. C. முதல், 1945 A. D வரை புரிந்துவந்த சண்டைகள்யாவும் தேசிய மண்ணைப் பிடிக்கவே புரியப்பட்டன. நமது இந்திய நாட்டின்மீது முகமது கஜினி என்பேரன், 24 தடவை படையெடுத்தானாம்! ஜப்பான் தேசத்து ஜின்கோ என்ற சக்ரவர்த்தினி கொரியாமீது 100தடவை படையெடுத்தனளாம். கடைசியாக நமது பிரிட்டிஷாரும் இந்திய நாட்டை போர்புரிந்து இந்திய மண்ணைப் பிடிங்கி 200 வருடகாலமாக ஆண்டு வருகின்றனர். கடந்த 6000 வருடங்களாக, நடந்த சண்டைகளால் மாண்டவர்கள் எத்தனை, அனாதிகள் எத்தனை, பொருள் அழிவு எத்தனை, நாசமான நாடுகள் எத்தனை, கணக்கெடுக்க முடியுமா! இவ்வளவும் தேசியத்தால்(Nationalism) வந்ததென உணர்க-

காந்தியார் சுயராஜ்யத்தில் இவ்வித போர் நடக்கா தென்பது, என்ன நிச்சயம்? இதுவும் தேசிய ராஜ்யமாத லால் அதன் அறிகுறியாகிய சண்டையும், போரும், நிக ழாமல்இருக்காதெனவும் உணர்க. 'சாத்மீகம்' 'சாத்மீகம்' என்பது சமயோசிதச்சொல்லே யொழிய காரியாம்சத்தில் அச்சொல்லால் யாதொன்றும்பயனிராது. "என் தேசம்" "உன் தேசம்" என்ற வித்தியாசம் இருக்கும் வரை, போர்கள் நடந்தே தீரும். இந்திய சுயராஜ்யத்தில்,இந்திய நாடு போரற்றுவாழுமென்பது வீண்பேச்சு. இந்தத்தேசிய முதலாளிகளே,இந்த வர்த்தகர்களே, இந்த ஜட்ஜுகளே, இந்த லாயர்களே, சுயராஜ்யத்தில் அரசுபுரியப்போகின்ற வர்கள். இவர்களுடைய செல்வத்தையும்,செல்வாக்கையும் ஆதிக்கத்தையும், பாமர மக்களுக்குச் சரிசமத்துவமாக விட்டுகொடுக்கப் போகின்றார்களா? அது ஒருபோது மில்லை. பிறருடைய நாட்டின் செல்வத்தின்மேல் இவர் களுக்கெல்லாம், ஒரு கண் இருந்தே தீரும், இனி வரப் போகும் சுயராஜ்யம், ராம ராஜ்யத்தைப்போல் இருக்கு மென்று சொல்லும்போதே, அந்தச் சுயராஜ்யத்தின் லட் சணம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கிவிட்டது. ராமன் குழந்தை பருவ முதல் சாகும் வரை போர்புரிந்து வந்திருக்க, இனிவரும் ராமராஜ்யம் போரற்று இருக்குமா வென்று கேட்கின்றோம்? இலங்கை அழிந்தது சீதையால் என்ற சிறு பெண்கள் பாடும் கதையை மறக்கமுடியுமா? மாரீசன், வியாகுலவைக் கொன்று, தாடகையைச் சித்திர வதைச்செய்து, சூர்ப்பனகையை மூக்கையும், காதையும் அறுத்து, இறுதியில் இலங்கையையும், இராவணனையும் அழித்து, இலங்கைத் தீவு முழுமையும் கைப்பற்றியது அகிம்சையா என்று கேட்கிறோம்? இராமன் இலங்கையை

விட்டுத் திரும்பி வந்ததும், சாந்தமாக ராஜ்யபாரம் செய்ய வில்லையே. அயோத்திக்கு வந்தவுடன் உலகத்தை ஜெயித்து ஏகாதிபத்தியத்தை நிலைநாட்ட, தான் பெற்ற மக்களுடனே போர்புரிந்து, அஸ்வமேத யாகம் செய்ததை யார் மறப்பார்கள்? அயோத்தியிலிருந்து இலங்கைவரை, ரத்தக்களமாக்கிய ராமராஜ்யத்தைப்போல காந்தி ராஜ்யமுமிருக்குமென்றால், இந்திய சுயராஜ்யத்தின் ஆபாசம் விளங்கவில்லையா! ஆதலின், காந்தியின் சுயராஜ்யத்தை உதறித்தள்ளுவதற்கு இதுவொன்றே போதும். இதுவுமன்றி அஹிம்சா தர்மியாகிய காந்தியாரும், நேற்று கொன்றவனைப் புகழ்ந்து போற்றியதை யாரும் மறக்க மாட்டார்கள். அது தேசியமென்றால், அதைத்தான் நாங்களாகிய சமதர்மிகளும் சொல்லுகின்றோம், தேசியத்தில் எந்த தேசமானாலும் சரி, எந்த மகாத்மா ஆண்டாலும் சரி, போரின் மனப்பான்மையும், சண்டையும் இல்லாமல் போகாதென்கின்றோம்.

## தேசியமும் மூட நம்பிக்கையும்

எந்த மூடதேசியத்திலும் நம்பிக்கையை ஆதரிக்காமலிரார். மதங்களை ஆதரிக்காத தேசியம் உலகிலில்லை; இருக்கப் போவதுமில்லை. நேராக ஆதரிக்காவிடினும், பாராமுகத்தோடாகிலும் மதங்களைத் தேசியம் தழுவியே தீரும். இதைச் செய்யாத சுயராஜ்யம் எங்குமில்லை. தேசியம், அதாவது சுயராஜ்யத்தில் சோவியத் நாட்டைத் தவிர, மற்ற எந்த சுயராஜ்யநாடு மதத்தை எதிர்த்து நிற்கின்றது? காந்தியார் சுயராஜ்யத்தில் மாத்திரம் மதத்தைத் தடுக்கப் போகின்றார்களா? அது இல்லையென்றே தீர்க்கமாகச் சொல்லலாம். தீண்டாதாரைக்

கோவிலில் போகவிடுவது, மதத்தைத் தடுப்பதற்கு அடையாளமல்ல. பாமர மக்களை இன்னமும் மூடநம்பிக்கையில் ஆழ்த்தி வைக்கத்தான் இந்த கோவில் பிரவேச உபாயத்தைக் காட்டுவதென்று அறிதல் வேண்டும். வர்ணாச்சிரம தர்மத்தை ஆதரிப்பதும் மதத்தை நழுவவிடுவதல்ல. இந்த உபாயமும் ஏழை மக்கள் சண்டைகள் செய்து அவதிப்படுவதற்குத்தான் ஏற்பட்டுள்ளது. இந்து மகமதிய ஒற்றுமை என்றபோதே, இனிவரும் சுயராஜ்யம் மதங்களை ஆதரிக்கும் சுயராஜ்யமேயொழிய வேறல்ல என்பது விளங்குகின்றது. இதை நாம் வாதிக்கவேண்டியதில்லை. இவ்விரு மதஸ்தர்கள் செய்துகொண்ட ஒற்றுமை ஒப்பந்தத்தில், அவரவர் மதங்களைச் சுயராஜ்யத்தில் ஆதரிப்பதாகவே உடன்பட்டுள்ளார்கள். மதங்களை ஒழித்துவிடாமல் ஆதரித்து வருவதால், மதப்பித்து வளருமென்பதற்கு என்ன சந்தேகம்.

## மதங்களும், அரசியலும்.

உலகிலுள்ள எல்லா சுயராஜ்ய அரசுகளும், மதங்களைத் தழுவி நிற்பதற்குக் காரணம் என்னவெனில், மதங்கள் யாவும் தேசிய அரசை ஆதரிக்கின்றன. இரண்டாவது, மதங்களின் ஸ்தாபனங்களில், அரசுபுரிவோருக்கு மிக்க செல்வாக்குண்டு. மூன்றாவது, அரசுபுரியும் வகுப்பாருக்குப் பாமர மக்கள் மூடராய் இருக்கவேண்டியது அவசியமாகும். நான்காவது, மூடப்பழக்க வொழுக்கங்களிலிருந்து பொதுமக்கள் விடுபட்டுத் தெளிவடைந்தால், தங்கள் அரசியல் ஆதிக்கத்திற்கு இடையூறு ஏற்படுமென்றபயம் எல்லா அரசுகளுக்கும் இருந்து வருகின்றது. ஐந்தாவது, இத்யாதி காரணங்களால் தேசிய

ராஜ்யங்களில் மதங்களும் மூட வழக்கங்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஆறாவது, எல்லா சுயராஜ்யங்களிலும் ஜாதி வேற்றுமை, இன வேற்றுமை இருந்தே தீரும். ஏனெனில் எல்லா தேசிய நாட்டிலும், முதலாளியென்றும், தொழிலாளியென்றும் வித்தியாசமிருந்து வருவதாலென அறிக. உயர்ந்தவன் (Lord), பிரபு (Zamindar) ஒரு பக்கமும், தாழ்ந்தவன், பறையன், பள்ளன் மற்றொரு பக்கமும், எந்த சுயராஜ்யத்திலும் இருந்தே வருவார்கள். ஜனசமூகத்தில் இந்த ஜாதி வேற்றுமைகளும் சமயவேற்றுமைகளும் இருந்தால்தான், முதலாளி அரசு நிலைத்துச் செழிக்கமுடியும். இந்த இன வேற்றுமை எந்த தேசிய நாட்டிலுமுண்டு. அப்படியிருக்க, நமது காந்தியார் சுயராஜ்யத்தில் மாத்திரம் இந்த இன வேற்றுமை, ஜாதிவேற்றுமை இல்லாமற் போகுமா? அது ஒருபோதுமில்லை. நமது காந்தியார் தீண்டாமை ஒழியவேண்டுமென்கிறாரே ஒழிய, ஜாதி ஒழியவேண்டுமென்று சொல்வதில்லை. அவனவன் அந்தந்த ஜாதி வேலையைச் செய்யவேண்டுமென்று காந்தியாரும் கூறுகின்றார். இதைத்தான் 'பகவத் கீதையும்' கூறுகிறது. 'பகவத்கீதையைக்' காந்தியார் தன் வேதமென்றும் கூறுகின்றார். ஆனால் 'பகவத்கீதை' ஜாதியை பலப்படுத்த உண்டான நூலென அறிதல்வேண்டும். அதனால்தான் காந்தியாரும், அந்நூலை ஆதாரமாகக் கொள்கிறார். வேதங்களையும், புராணங்களையும், பகவத்கீதையையும் அதிகாரமாகக் கொண்ட சுயராஜ்யத்தில், ஜாதியெங்ஙனம் ஒழியும்? சமயங்கள் எவ்வாறுஒழியும்? பிராமணன் இருக்கும் வரை, பறையன் ஒழியமாட்டான். பறையன் இருக்கும்வரை, பிராமணனும் ஒழியமாட்டான். தீண்டா

தாரை கோவிலில் விடவேண்டுமென்பதெல்லாம் ஓர் குயுக்தியென வறிக. காந்தியார் சுயராஜ்யத்தில் அவர் உண்ணாவிரதத்திற்கிணங்கி தீண்டாதாரைக் கோவிலில் பிரவேசிக்க அனுமதித்தபோதிலும் அல்லது ஹரிஜன னென்றும், தரித்திர நாராயணனென்றும் தீண்டாதாரை மாயப் பேர்களால் அழைத்தபோதிலும் பறையனும் பள்ளனும், பறையனாகவும், பள்ளனாகவுமே அழைக்கப் படுவர்; அதற்குச் சந்தேகமில்லை. பூணூலை அறுக் காத காங்கரஸ்காரன் இருக்கும் வரையில், பறையனென் றும, பள்ளனென்றும், சர்க்கார் ரிகார்டுகளில் பதியும் வரையில், "தீண்டாமை ஒழிக" என்பதெல்லாம் வெறும் வேஷமெனவறிக. (This is nothing but a big camouflage) இது பெரும் மயக்கமேயொழிய வேறில்லை

## சுயராஜ்யமும் பொருளாதாரமும்

எல்லா சுயராஜ்ய தேசங்களிலும் ஆட்சி புரிவோரி டத்தே எல்லா பொருளாதார செல்வாக்கும் இருந்து வரும். ஆதிக்கத்திற்கு அடையாளம் செல்வமாகும் (Wealth). அரசுபுரிவோருக்கும் ஆதிக்கம் வேண்டும். இந்த ஆதிக்தத்திற்கே, எல்லா செல்வத்தையும், அரசு புரிவோர் தங்கள் கைக்குள் அடக்கிவைத்து இருக்க வேண்டி வருகிறது. பொதுவாகக் கருதவேண்டிய செல் வங்களாகிய நிலம், நீர், சுரங்கம், தொழிற்சாலை, ரயில், கப்பல், வீடு, மனை, கல்வி, பாங்கு முதலியயாவும் அரசு புரியும் இனத்தார் (Ruling Classse) கையில் இருந்தே வரும். அமெரிக்க அரசும், பிரெஞ்சு அரசும், ஜெர்மனி அரசும், பிரிட்டிஷ் அரசும் மற்றுமுள்ள பெரிய சிறிய முதலாளி அரசுகளும், சொந்த நாட்டின் பெரும்பான்

மையான பொதுச் சொத்துக்களைக் கைக்கொண்டே இருக்கின்றன. மிகுதியான சொத்துகள் யாவற்றிற்கும் அவ்வரசுகளில் ஆட்சிபுரிபவர்களே உரியவர்களாக இருந்துவருகின்றார்கள். இவ்வுரிமையால்தான் மற்ற பெரும்பான்மை குடி மக்களாகியப் பொருளற்றோரை அடக்கி ஆள முடிகின்றது. இந்தச் செல்வப் பெருக்கால் தான் அரசுபுரியும் சிறுபான்மை மக்களிடத்தில், ஏகாதிபத்திய அரசை நடத்தும் அதிகாரம் இருந்து வருகிறது. இந்தப் பொருளாதார செல்வாக்கைக் கொண்டுதான், இச் சிறுபான்மையோர், மற்ற பெரும்பான்மையோரை, அடக்கி ஆள சாத்தியப் படுகின்றது. இந்த நிலைமை காங்கரஸ் சுயராஜ்யத்தில் மாறுமாவென்று கேட்கின்றோம்? புலியும் பசுவும் ஓர் துறையில் நீர் அருந்தினாலும் அருந்தும்; ஆனால் முதலாளியும் தொழிலாளியும் சரிசமத்துவமாகத் தங்கள் தேச பொருள்களைக் காந்தியார் சுயராஜ்யத்தில் அனுபவிப்பார்கள் என்பது பகற்கனவே. தனது சுய ராஜ்யத்தில் தொழிலாளிக்கு, முதலாளி தர்மகர்த்தர்களாக இருக்கவேண்டுமாம்! முதலாளியைத் தொழிலாளி பணிந்து நடக்க வேண்டுமாம்!! முதலாளியைத் தொழிலாளி எதிர்க்கக் கூடாதாம்!!! தொழிலாளி பொருளாளியாகக் கோறக்கூடாதாம்!!!! இம்மாதிரியாக நண்டைச் சுட்டு, நரியைக் காவல்வைக்கும் தரும நீதியைத்தான் பொருளாளி இனத்தோர் மரபில் வந்தவராகிய காந்தியார் இந்தியாவில் வாழும் 40 கோடி இந்திய மக்களுக்குப் போதித்து வருகின்றார்!!!!! இந்தத் தருமநீதிதான், காங்கரஸ் பர்டோலி திட்டத்திலும் வற்புறுத்தப்பட்டுள்ளது. காந்தியார் சுயராஜ்யத்தில், முதலாளிகள் தொழிலாளிகளுக்கு 'டிரஸ்டி'களாக இருக்கவேண்டுமென்றால், மற்ற

தேசிய சுயராஜ்யங்களுக்கும், காந்தியார் சுயராஜ்யத்திற்கும் என்ன வித்தியாசம்? ஆங்கில நாட்டில் பால்டுவினும், மெக்டனால்டும், 4-கோடி ஆங்கில மக்களுக்கு டிரஸ்டிகளாகவே இருந்ததுபோல இந்திய நாட்டிலும் காந்தியார் தர்ம ராஜ்யத்தின்படி, ஜவகர்லால்நேரு 40-கோடி இந்திய மக்களுக்கு டிரஸ்டியாக இருக்கப்போகின்றார். இத்யாதி தற்போதுள்ள மேல்நாட்டு சுயராஜ்யத்தைவிட்டு, நமது நாட்டு காந்தியார் சுயராஜ்யத்தைக் கோறுவானேன்?

## சுயராஜ்யமும் தனிச்சொத்து உரிமையும்

இந்தத் தனிச் சொத்துரிமை கராச்சி காங்கரசிலும் வற்புறுத்தப்பட்டது: எல்லா தேசிய இராஜ்யங்களிலும், தனிச்சொத்துரிமைப் பாதுகாக்கப்படும். காந்தியார் சுயராஜ்ய திட்டத்திலும் முக்கியமாகத்தனிசொத்துரிமைப் பாதுகாக்கப்பட்டுள்ளது. புதிய அரசியல் திட்டத்திலும் (The new Constitution) தனிச் சொத்துஉரிமை பாதுகாக்கும்படித் திட்டமேற்பட்டுள்ளது. புதிய குடிஅரசுகளாகக் கருதப்பட்ட ஜெர்மனி (Germany), போலந்து (Poland), துருக்கி (Turkey) முதலிய தேசிய அரசுகளில் தனி சொத்துஉரிமைக்குப் பாதுகாப்புகள் கொடுக்கப்பட்டன. இந்த பாதுகாப்பின் இலட்சணம் என்னவெனில், உலகம் இரண்டு வகுப்பாகப் பிரிந்திருக்கும் காட்சியே ஆகும். உடையவன், இல்லாதவன், என மனிதக் கூட்டம் பிரிந்திருப்பதும், இந்தத் தனிச் சொத்து உரிமையால் நிகழ்ந்துவரும் வித்தியாசம் என அறிதல் வேண்டும். மகராஜன், ஏழை என்று உலகமக்கள் பிரிந்து இருப்பதும், இந்தப் பொருளாதார வித்தியாசத்தினால்தான் என

அறிக. எஜமான், வேலைக்காரன் என்ற வித்தியாசமும், முதலாளி. தொழிலாளி என்ற வித்தியாசமும் சுதந்திரக்காரன் (Freeman), அடிமை (Slave) என்னும் வித்தியாசமும் மக்களுக்குள் ஏற்பட்டகாரணம் என்னவெனில், சிலரிடம் பொருள் தங்குவதாலும், பலரிடத்தில் ஒன்றும் இல்லாமையாலும் என அறிக.

## பொருளாதார வித்தியாசம்

இந்தப் பொருளாதார வித்தியாசம் (Economic inequality) ஆதிகாலம்தொடங்கியே நீடித்துவந்துள்ளது ராமராஜ்யத்திலும், தசரத ராஜ்யத்திலும், துரியோதன பாண்டவர் ராஜ்யத்திலும் இந்தப் பொருளாதார வித்தியாசம் இருந்தே வந்தது. இன்றைக்கும், பிரிட்டிஷ் முதலிய சுயராஜ்யங்களிலும் இருந்தே வருகின்றது. நாளைக்கும் காந்தியார் சுயராஜ்யத்தில் இருந்தே வரப்போகின்றது. இதற்கு என்ன தடை? தனி சொத்துரிமை (Individual Ownership) பாதுகாக்கப்படும்வரை, சிலரிடத்தே பொருள் தங்கும். பலர் பட்டினிகிடக்க வேண்டியதே. தண்ணீர் பள்ளத்தை நோக்குவதைப் போல், செல்வம் பணம் படைத்த சிலரிடத்தே சென்று குவியும். இல்லாமை, அதாவது, வறுமை, ஏழை மக்களிடம்தான் தங்கும். இந்தக் கொடிய திட்டத்தை மாற்றி, யாவரும் தம் சுயராஜ்யத்தில், சொத்துரிமையைப்பெற, நமது காந்தியார் ஒரு சொல்லேனும் சொல்லவில்லை. கதரை ஆதரியுங்கள், தீண்டாதாரைக் கோவிலில் விடுங்கள் என்று உபதேசிக்கின்றார். ஆனால் கதர் திட்டம், சிலர் மாத்திரம் பணக்காரர்களாகும் பொருளாதாரத்திட்டம் என்பதை அவர் (Economic Law) உணர்ச்

தாரில்லை. கோவிலில் 7-கோடி தீண்டாதாரை விட வேண்டும், அல்லாவிடில் பட்டினிகிடந்து சாவேன் என்று பயமுறுத்தினாரேயொழிய, அந்த 7-கோடி பஞ்சமர்கள் நிலமில்லாமல்,நீரில்லாமல், குடிக்க கஞ்சியில்லாமல சாகின்ற கொடுமைகளைக கவனித்தாரில்லை.மற்ற தேசியநாடுகளில் உள்ள மகாராஜனும், ஏழையும், உடையவனும், (Haves), இல்லாதவனும் (Have nots), முதலாளியும், தொழிலாளியும், சிலரிடம் செல்வப்பெருக்கும், பலரிடம் தரித்திரமும் சிலரிடம் வீண் செலவும் (Waste) பலரிடம் சிக்கனமும் (Economy) இருந்து வருவதைப் போல், இந்திய சுயராஜ்யத்திலும் இருக்குமாகையால், இந்திய சுயராஜ்யத்தின் விசேடமென்ன?

இந்தப் பொருளாதாரவேற்றுமை யுள்ளவரை எந்த அரசாயினும் சரி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்வம் என்பதெல்லாம் பொய்ப்பேச்சு. உடையவனுடைய பொருளைக் காப்பதற்குத்தான், எல்லா போலீசும், எல்லா நீதியும், எல்லா சேனை சிப்பந்திகளும் ஏற்பட்டுள்ளன. ஆனால், இல்லாதவனுடைய வறுமையைப் போக்க, எந்த நியாயம், எந்த சட்டம், எந்த அரசு ஏற்பட்டுள்ளது? இனி வரும் சுயராஜ்யத்தில் தினம் ஒன்றுக்கு ராட்டினத்தைச்சுற்றி 5-பைசா சம்பாதியுங்களென திட்டமிடப்போகிறார்கள். இந்த 5-பைசாவைக் கொண்டு ஒருவன் உண்ண உணவும், உடுக்க ஆடையும், இருக்க வீடும், கற்கக் கல்வியும், தனக்கும், தன்மனைவி குழந்தைகளுக்கும் தேடிக்கொள்ளவேண்டும்! இதுதான் நமக்கு காந்தியார் கொண்டுவரும் பெரும் சுயராஜ்யத்தில் இடப்போகும் நன்கொடை. ஆனால், அந்தச் சுயராஜ்யத்தில் ஒருவனிடம் இருக்கும் நவரத்தினமிழைத்த நகை

களையும், பங்களாக்களையும், தோட்டம் துறவுகளை யும், ரத்தன கம்பளிகளையும், நாற்காலி, மேஜை, சோபாக்களையும், வீடு வாசல்களையும், மோட்டார்கார் களையும், தாசி வேசிகளையும், குடி கூத்திகளையும் தொடப்படாதாம்! அசைக்கப்படாதாம்!! இந்த நிலைமை தான் நமது சுயராஜ்யத்தில் காக்கப்படுமென்று காங்கிரஸ் அரசியல் திட்டத்தில் செய்துள்ளது!!! இப்படிப் பட்ட சுயராஜ்யத்தைவிட, சுடுகாடே மேலென்பதற்கு என்ன தடை?

இந்தப் பொருளாதார வித்தியாசத்தால், தொழிலாளிக்குத் தொழில் நிச்சயம் (Security of Service) இல்லாமல் போகின்றது. போதுமான வருமானமும் (Living Wage) இல்லாமற் போகின்றது. தற்கால உலகப் பொருளாதாரத்திட்டத்தில் (Current Economic System) தொழில் நிச்சயமும் போதுமான வருமானமும், கிடைக்கப்போவதில்லை. இந்தத் திட்டத்தை அனுசரித்துவரும் தேசிய ராஜ்யங்களில் (Nationalist Governments) இம் மூன்று பொருளாதாரச் செல்வாக்கும் (Economic Advantageous) தொழிலாளிக்குக் கிடைக்காமலிருக்க, நமது இந்திய சுயராஜ்யத்தில் மாத்திரம் எப்படி கிடைக்கும்? தனி சொத்துரிமையோடு இணைபிரியாமலிருப்பது, பொருளாதார அடிமைத்தனமொன்றே. இந்த அடிமைத் தனம் நீங்கினாலொழிய, தொழிலாளிக்கு வேலை நிச்சயம் ஏற்படப்போவதில்லை. உண்ண போதுமான உணவும் அகப்படப்போவதில்லை. உண்ண உணவும், வேலை நிச்சயமும், இவ்விரண்டும் கிடைக்காத சுயராஜ்யம் வந்தாலென்ன? வாராதிருந்தாலென்ன? இந்தச் சந்தர்ப்பத்தில் தொழிலாளரும் விவசாயிகளும் மற்றுமுள்ள பொதுஜனம்

களும் அறிந்துகொள்ள வேண்டியது என்னவெனில், இந்தப் பொருளாதார அடிமைத் தனத்தை (Economic Slavery) நீக்க ஒரு வார்த்தைகூட காந்தியார் சொல்வதில்லை. 'கதர்' 'கோவில் பிரவேசம்' 'தீண்டாமை' 'தர்மகர்த்தர்கள்' என்ற இந்தச் சொற்களைத்தான் பல்லவியாகப் பாடிவருகின்றார். இச்சொற்களால்தான், இவரைச் சுற்றியுள்ள முதலாளிகளும், வர்த்தகர்களும் பணக்காரர்களும், பார்ப்பனர்களும் இவரை மதித்து வருகின்றார்கள். இச்சொற்களால்தான் அவருக்குள்ள எல்லா செல்வாக்கும் மதிப்பும். மேலே குறிப்பிட்ட பூச்சாண்டி சொற்களை விட்டுவிட்டு, வேலை நிச்சயம், போதுமான உணவு முதலிய பொருளாதாரப் பாடலைப் பாடுவாரேயானால் ருக்குத் தற்போதுள்ள தேச மதிப்பும், செல்வாக்கும், ஒரு நிமிஷத்தில் பறந்துபோகுமென அறிக.

சுருங்கக் கூறுமிடத்து, காந்தியார் சுயராஜ்யத்தில் தனிஉடமை ஆதரிக்கப்படும், அதில் அடங்கியுள்ள பொருளாதார அடிமைத்தனமும் நிலைத்து வரும். தொழிலாளிகளுக்கும், விவசாயிகளுக்கும், உண்ண போதுமான உணவு இல்லாமை இன்றைக்கு இருந்தவாறே இருந்து வரும். தோழர்களே! இந்தச் சுயராஜ்யமா வேண்டுமெனகேட்கின்றேன்? ஏனெனில், காந்தி ராஜ்யத்தில் தற்போதுள்ள நிலைமையாகிய பொருளாதார வித்தியாசமே நிலைத்து வரப்போகின்றது. ஆயிரம் பதினாயிரம் பேர்கள் மாத்திரம் எல்லா நிலங்களையும், நீர்களையும் (Waters) தொழிற்சாலைகளையும், ரயில்வேக்களையும், வீடு வாசல்களையும், பாங்குகளையும் சொந்தமாக ஆண்டு வரப் போகின்றார்கள். ஆனால் கோடானுகோடி மக்களோ, இவைஎதுவும் சொந்தமின்றி, உண்ண போது

மான உணவின்றி, அறிவு விளங்க சரியான கல்வி இன்றி, மக்களை வளர்க்க சுகாதார வீடின்றி, போதுமான கூலியின்றி, வேலை நிச்சயமின்றி உழைத்துவரப் போகின்றார்கள். காந்தியார் சுயராஜ்யத்தில் அதுதான் சிலருக்கு வரப்போகும் நற்பாக்கியம். இதுதான் பெரும்பான்மையோருக்கு வரும் துர்ப்பாக்கியம்.

ஆதலால், இந்தத் துர்ப்பாக்கிய நிலைமைமாறி எல்லா மக்களும் சரி சமத்துவமாக வாழவேண்டுமானால், சமதர்ம ராஜ்யத்தில் ஒன்றில்தான் முடியும். ஆதலால், தோழர்களே! இந்தச் சமதர்ம ராஜ்யம் (Socialism) வேண்டுமா என்று கேட்கின்றேன். இனி சமதர்ம ராஜ்யத்தை விளக்குவோம்.

———

# இரண்டாவது அத்தியாயம்.

## சமதர்ம ராஜ்யத்தின் இலட்சணங்கள்.

முன் ஏடுகளில் சுயராஜ்யத்தின் இலட்சணங்களையும், அதன் குறைபாடுகளையும், எடுத்துக் காட்டினோம். இந்தச் குறைகளை உடைய ராஜ்யம் நமக்கு வேண்டுமா எனவும் கடாவினோம். இனி சமதர்ம ராஜ்யத்தின் இலட்சணங்களையும், அதன் மேம்பாட்டையும் விளக்குவோம்.

சமதர்மம் அல்லது சமதர்மராஜ்யமென்றால் என்ன? "சமதர்மம்" என்ற சொல்லிற்குரிய பொருள் என்னவெனில், சமத்துவப் பொறுப்பு (Equal Responsibility) என்பதாம். தனவந்தரும், எளியோரும்; முதலாளியும், தொழிலாளியும்; உடையோனும், இல்லாதவனும்; நிலம் படைத்தோனும், நிலம் இல்லாதவனும்; வீடு படைத்தவனும், வீடு இல்லாதவனும்; வாங்குவோனும் விற்போனும் ஆகிய எல்லோரும், சரி சமத்துவப் பொறுப்பு வாய்ந்தவர்களாக இருத்தல் சமதர்மமெனப்படும். எப்பொழுது சமப்பொறுப்பு இருக்கின்றதோ, அப்பொழுதே அதனோடு சமஉரிமையும் உண்டு. அதனை ஆங்கிலத்தில் Equal Right என்று வழங்குவார்கள். ஆதலின் சமதர்மத்தில், சரிசம பொறுப்பும், சரிசம உரிமையும் (Equal Rights and Equal Responsibilities) பொருந்தி உள்ளன. எந்தச் சமூகத்தில் எல்லா மக்களுக்கும் சமஉரிமையும், சம பொறுப்பும் உள்ளனவோ, அந்தச் சமூகம், சம

தர்ம சமூகமெனப்படும். அதனை ஆங்கிலத்தில் Socialist Community என்று கூறுவர். அவ்வித சமதர்ம சமூக ஆட்சியைச் சமதர்ம ராஜ்யமென்று வழங்குவர். ஆங்கிலத்தில் இதனை Socialist State என வழங்கப்படும்.

சிலர், எந்தச் சமூகமாவது, சாதி வேற்றுமை இல்லா திருந்தால் அதனைச் சமதர்மமுள்ள சமூகமென நினைக்கின்றார்கள். அது தவறு. முகமதியர்களுக்குள் சாதி வேற்றுமையில்லை. ஆனால், அச் சமூகத்தைச் சமதர்ம சமூகமென்று கூறமாட்டார்கள். இன்னும் சிலர், ஜாதி வேற்றுமையும், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேற்றுமையுமற்று, பொதுவாக உண்ணுதல் சமதர்மமென்பார்கள். அதுவும் தவறு. முகமதியர்களும் ஐரோப்பியர்களும் ஜாதி வேற்றுமையின்றி, சமத்துவமாக உண்ணுகின்றார்கள். ஆனால் அவர்களைச் சமதர்ம சமூகத்தினரென்று அழைக்கமுடியாது. கலப்புமணம் எந்தச் சமூகத்தில் நடக்கின்றதோ, அந்தச் சமூகம், சமதர்ம சமூகமென்பார்கள் சிலர். அதுவும் தவறு. கலப்பு மணம் புரியும் சமூகங்கள் பலவுள. அப்படி இருந்தும் அச் சமூகங்களைச் சமதர்மசமூகமென்று அழைப்பதில்லை. மதமற்ற சமூகம் சமதர்மமாகுமா? என்று பார்ப்போமானால், அதுவும் ஆகாது. நாஸ்திக சமூகத்தாரைச்சமதர்மிகளென்று வழங்குவதில்லை. ஆனால் ஜாதியின்மையும், மதமின்மையும் சமதர்ம அனுஷ்டானத்தில் சேர்ந்தவைகளாக இருந்த போதிலும், இவைகளை மாத்திரம் அனுஷ்டிக்கக்கூடிய சமூகங்கள் சமதர்ம சமூகமாகா. சரி சமத்துவம், சம உரிமை ஆகிய இவை இரண்டும் பொருள் படைத்தலில், அதாவது பொருளாதாரத்தில் இல்லாவிடில், மற்ற எந்த உரிமையும், எந்தச் சமத்துவமும் இருந்தும் பயனில்லை.

எந்தப் பொறுப்பு இருப்பினும் பயனில்லை. பொருளாதாரத்தில், சமஉரிமை (Equal Rights,) சமபொறுப்பு (Equal Responsibility) எந்தச் சமூகத்திலில்லையோ, அந்தச் சமூகம் சமதர்ம சமூகமாகாது.

பாரத ராமாயண காலமுதல் எவ்வளவோ, கடவுளற்ற சமூகங்களிருந்தன; ஜாதியற்ற சமூகங்களிருந்தன. இன்றைக்கும் இருந்து வருகின்றன. ஆனால் அவைகள் யாவும் சமதர்ம சமூகங்களெனச் சொல்ல முடியாது. அப்படியானால் சமதர்மமென்றால் என்ன? நாட்டில் விளையும் விளைபொருளையும், செய்யப்படும் செய்பொருளையும் அந்நாட்டிலுள்ள யாவருக்கும், சரிசமத்துவமாக விநியோகம்செய்யும் சமூகமெதுவோ அதுதான் சமதர்ம சமூக மெனப்படுமென மதிக்கப்படும். மற்ற சமூகங்கள் யாவும், முதலாளி சமூகமென்றாகிலும், அல்லது சிறு பொருளாளி சமூக மென்றாகிலும், வழங்கப்படும். இத்யாதி சமூகங்கள், ஜாதி இல்லாதவர்களால் நிறைந்திருக்கலாம், அல்லது மதமற்றவர்களால் நிறைந்திருக்கலாம், அல்லது கலப்பு மணம் செய்கின்றவர்களால் நிறைந்திருக்கலாம். இருந்தாலும், இத்யாதி சமூகங்கள், சமதர்ம சமூகங்களாகா.

## சமதர்ம சமூக, முக்கிய இலட்சணங்கள்.

சமதர்ம சமூகத்தில், மற்ற சமூகங்களில் இருந்து வரும் முக்கிய இலட்சணங்கள் இல்லாமலிருந்து வரும். அவையாவன:— முதலாவது சகலவித பொருள்களிலும் இலாபம் சம்பாதிக்கும் மனப்போக்கு சமதர்மத்தில் இல்லாமலிருக்கும். இந்த மனப்போக்கால், உழைத்தவனுக்கு

ஒன்றுமில்லாமல், உழைக்காத சோம்பேறிகளுக்கு எல்லா இலாபமும் கிடைக்கும். இப்படிப்பட்ட திட்டம் சமதர்மத்திலில்லை. இரண்டாவது, சிலரே சகல பொருள்களையும் கைப்பற்றி, சொந்தமாக்கிக்கொள்ளும் இலட்சணமும், சமதர்மத்தில் இல்லாமலிருக்கும். மூன்றாவது, விளையும் பொருள்களும், செய்யும் பொருள்களும், விளைவிக்கச் செய்யும் சமூகத்தாருக்கு ஏற்றத்தாழ்வின்றி விநியோகம் செய்யப்படும் இலட்சணம் சமதர்மத்தில் விஷேடமாகப் பொருந்தி உள்ளது. நான்காவது, சமதர்ம சமூகத்தில் நிலத்தீர்வை வாங்கும் நிலச்சுவான் இரான். குடக்கூலி வாங்கும் சொந்தக்காரனுமிரான். இலாபம் சம்பாதிக்கும் வர்த்தகனுமிரான். வட்டிவாங்கும், வணிகனுமிரான். அவசியமாக வாங்கவேண்டிய நிலத்தீர்வையும், குடக்கூலியும், வீட்டு வாடகையும், வர்த்தக இலாபமும், கடனுக்கு வட்டியும், சகலவித இலாபங்களும் (Profits), பொது மக்களுக்கே உரித்தாகி, அவர்களின் வாழ்விற்கு வேண்டிய அத்தியாவசியங்களாகிய உண்ணும் உணவு, தங்கும் வீடு, வாசல், அணியும் ஆடை, கற்கும் கல்வி முதலியவற்றிற்கு உபயோகப்படுத்தப்படும். ஐந்தாவது, தற்கால சோம்பேறிகளாகியநிலச்சுவானும், வர்த்தகனும், வணிகனும், வாடகை வாங்குவோனும், சமதர்ம சமூகத்தில் உழைக்கும் மக்களோடு, சரி சமத்துவமாக உழைத்து எல்லாவித சமதர்ம சுகபோகங்களையும் சரிசமத்துவமாக அநுபவிக்கும் பாக்கியத்தைப் பெறுவார்கள். ஆறாவது, சமதர்ம சமூகத்தில் சொத்துவைத்திருக்கும் ஜாதி என்றும் (Haves), சொத்து இல்லாத ஜாதியென்றும் (Have Nots) சொல்லப்படும் பாழான இனவேற்றுமை இருக்காது. எஜமான்ஜாதி யென்றும், வேலைசெய்யும் ஜாதி

யென்றும் சமதர்மத்தில் கிடையா. தற்கால உலகத்திலே இருக்கும் இரண்டு ஜாதியர்களாகிய, பொருளாளி தொழிலாளி என்போர் இருக்கமாட்டார்கள். சமதர்மத்தில் ஒரே இனம்தான் இருக்கும். அதாவது உழைக்கும் இனம் ஒன்றுதான். ஏழாவது, சமதர்மத்தில் ஒவ்வொருவனுக்கும் உழைக்க உரிமையுண்டு, பொறுப்புண்டு. எட்டாவது, “உழைக்காதவனுக்கு உணவில்லை” என்பதே சமதர்ம கொள்கையாகும். ஒன்பதாவது இக்காலத்தில் உழைப்பின்றிச் சோம்பேறிகளாகவாழ்ந்துவரும் சில மக்களுக்குச் சமதர்மத்தில் வாழ இடமே இல்லை. பத்தாவது, சமதர்மத்தில் சோம்பேறிகள் வாழவும் முடியாது. சமதர்மத்தில் இன்னும் சில இலட்சணங்களுண்டு. உழைப்பவன் ஒருவன், அனுபவிப்பவன் வேறொருவன் என்ற ஆபாச வித்தியாசமான நிலைமையே கிடையாது. “உழைப்பவனுக்கு உரியது, உழைப்பின் பயன்” என்பது தான் சமதர்மத்தின் தர்மம். சமதர்மத்தில் எல்லோரும் உழைக்கவேண்டும். உண்டாக்கப்படும் பொருள்களும், விளைவிக்கப்படும் பொருள்களும், தினசரி வாழ்விற்கு வேண்டியவையாதலால், சமதர்ம சமூகத்தில், வேலை எல்லோருக்கும் இருந்தே வரும். சமதர்மத்தில் வேலை இல்லை என்று சொல்லும் நிலைமை வராது. எந்த வேலையாகிலும் இருந்துகொண்டே இருக்கும். சமதர்ம சமூகத்தில் வேலை செய்வோர் போதாமலிருக்குமே யல்லாது யாருக்கும் வேலையில்லாமல் இராது.

சமதர்மத்தில்,எந்தக் காலத்திலும்,திருப்தி என்பதே இருக்காது. திருப்தி அடைந்த மனித சமூகம், இறந்த சமூகத்திற்கே (extinct society) சமானமாகும். எனவே அதிருப்தியே மனிதசமூகத்தின் இயற்கைக் குணமாகும்.

அதிருப்தியால்தான், மனித சமூகம், மற்ற மிருகாதிகளை வென்று, தப்பிப் பிழைத்து வந்திருக்கிறது. "இராமன் ஆண்டாலென்ன" "இராவணன் ஆண்டாலென்ன" என்று மனிதன் எண்ணி வந்திருப்பானேயாகில், அவனுடன் வாழ்ந்து வந்த கொடிய மிருகாதிகள் அவனை வாயில் போட்டுக்கொண்டே இருக்கும்.

"ஊரையாளும் ராஜா எவனாயிருந்தாலும், தோட்டிக்குப் புல்சுமக்கும் வேலைதான்" என்று 7கோடி தாழ்த்தப்பட்டோர் எண்ணி வந்ததினாலேயே, அவர்கள் தீண்டப்படாதவர்களென்றும் செல்வமடைய பொறுப்பற்றவர்களென்றும், கோவிலுக்குள் நுழையக்கூடாதவர்களென்றும், பண்ணையாட்களென்றும், பறையர்களென்றும் அடிமைகளென்றும், ஹரிஜனங்களென்றும், அழைக்கப்பட்டு வந்திருக்கின்றனர் இவ்வினத்தாருடைய மனத்திருப்தியே இவர்கள் வாழ்வைத் தாழ்வுபடுத்தி, இவர்களை முன்னேற்றமடையவொட்டாமல் செய்து வந்திருக்கின்றது. இந்தியர்களில் சில சோம்பேறிகள் "ஆங்கிலேயருக்குச் சந்திரனிடத்தில் பொன் சுரங்கமிருப்பதாகத் தெரிந்தால் அங்கேயும்போய்ப் பார்ப்பார்கள்" என்று ஏளனம் செய்வதைக் கேட்டுமிருக்கிறேன். அவ்வாறு எழுதி உள்ளதைப் படித்துமிருக்கிறேன். இவ்விதமாகப் பிறரை ஏளனம்செய்யும் மனப்பான்மையால்தான், இந்தியர் கடந்த 2000 வருடங்களாக, யாவனர்களுக்கும் (Greeks), சித்தியர்களுக்கும் (Sythians) மங்கோலியருக்கும் (Mongals)டார்ட்டார்களுக்கும்(Tartors), உலாந்தாக்காரர்களுக்கும் (Hollanders), டச்சுக்காரர்களுக்கும் (Duch), போர்ச்சுகீசியர்களுக்கும்(Portuguese), பிரஞ்சுக்காரர்களுக்கும் (French) கடைசியாக ஆங்கிலேயர்களுக்

கும் (Engilsh), அடிமைகளாய் இருந்துவந்தனர், வருகின்றனர் எனலாம். காட்டுமிராண்டியாய் இருந்த மனிதர், நாளடைவில் நாகரீகத்தை அடைந்ததற்கு மூல காரணமாகவும், தூண்டுகோலாகவும், இருந்து, மனிதனை முன்னேறச் செய்தது அதிருப்தியே. Dissatisfaction is the mother of all progress. அதாவது, அதிருப்தியே எல்லா முன்னேற்றத்திற்கும் தாய் என்றார் பெரியோர். எனவே, சமதர்மத்தில் திருப்தி என்பதே இருக்காது. இருக்கும் சுகத்தைவிட மேலான சுகம் பெறவேண்டுமென்ற எண்ணம் சமதர்மசமூகத்தில் குடிகொண்டே வளர்ந்து வரும். இந்த மனப்பான்மையைத் திருப்தி செய்ய முயற்சி எழுந்தவாறு இருக்கும். இன்று பாதரட்சை, நாளைக்கு மின்சாரவிளக்கு, அதன் பிறகு உயர்தரக்கல்வி, அதன்பின் ஓய்வு நேரம், பின்னர் நந்தவனம், நல்ல வீடு, நல்ல பிள்ளைகள், நல்ல மனிதர் என்ற முறையில் படிப்படியாகவே சமதர்ம வாழ்வு உயர்ந்துகொண்டே வரும். சமதர்ம உலகில் மனிதன் மேன்மேலும் தன் வாழ்வை உயர்த்திக்கொண்டே போவான். (In the evergrowing life,) சதா உயர்ந்துகொண்டே போகும் வாழ்விற்கு வேண்டிய பொருள்களை உண்டாக்க, வேலை எல்லோருக்கும் இருந்துகொண்டே இருக்கும். இந்தச் சமதர்ம சமூகத்தில், இறந்து போனவர்களுக்கும், இறந்தவர்களுக்குச் சமானமானவர்களுக்கும் மாத்திரம் வேலை இல்லாமலிருக்குமே ஒழிய, மற்ற உயிர்வாழும் எந்த மனிதனுக்கும் வேலையில்லாமலிராது. அந்தச் சமதர்மஉலகில், சிக்கனம் (Retrenchment) என்பதும், சம்பளத்திலும் கூலியிலும் குறைவு (Cut in Salary, or Wages) என்பதும், கனவிலும் கேட்பதரிது.

வேலையின் இன்பம் (Love of work), சமதர்ம சமூகத்தில்தான் காணமுடியும். நாமெல்லாம் உழைத்து விட்டு, உழைப்பின் பயனெல்லாம் வேலைசெய்யாதவன் அடையும் நிலைமையையும் வேலை செய்தவன் சொற்ப கூலியோடு செல்லும் காட்சியையும் சமதர்ம சமூகத்தில் காண்பதரிது. சமதர்ம சமூகத்தில் ஒருவன், தான் செய்யும் வேலையின்முழுப்பயன் தனக்கே கிடைக்குமாதலால், அன்புடனும், ஆசையுடனும், தனக்கிட்ட வேலையைச் செய்து வருவான். வேண்டாவெறுப்பாகச் செய்யும் இக்கால வேலை சமதர்மத்தில் இருக்காது. சமதர்ம சமூகத்தில், செய்துவரும் வேலையெல்லாம், சிலர் உபயோகத்திற்கல்லாமல் யாவருடைய உபயோகத்திற்கும் செய்து வரப்படுமாகையால், அதில் உழைப்பவர் ஒவ்வொருவருக்கும் வேலைசெய்து உழைக்க அவாமேலிட்டுவரும். சமதர்ம சமூகத்தில் ஒருவனுக்குப் பலர் உழைக்கவேண்டிய அவசியமில்லாதபடியால் ஒவ்வொருவனும் தனக்குத் தெரிந்த வேலையை அன்புடன் செய்துவருவான்.

சமதர்மத்தில் வேலைநிறுத் தம் என்பதே அவசியமில்லாமற் போகும். இக்காலத்தில், மக்களுக்குத் தாம் செய்யும் வேலையிலும் அதன் முழுப்பயனை அனுபவிப்பதிலும் அவர்களுக்கு யாதொரு அக்கும் பாத்தியதையும் இல்லாததால்தான் வேலை நிறுத்தங்கள் உண்டாகின்றன. ஆனால் வேலை செய்வோரே, தொழில் புரிவோரே, தாங்கள் செய்துவரும் வேலைநிர்வாகத்தைத் தாங்களே பரிபாலனம் செய்யும் பாத்தியதைச் சமதர்மத்தில் பெறுவாராகையாலும், தாங்கள் செய்துவரும் வேலையில் எழும் குறைகளைத் தாங்களே சரிசெய்து கொள்வார்க

லாகையாலும், வேலை நிறுத்தமோ, அல்லது கதவடைப் போ சமதர்மத்தில் இல்லாதிருக்கும்.

சமதர்ம சமூகத்தில் வேலைநிறுத்தம் குறைந்தே வரும். 8, 9, 10 மணிநேரம் செய்யும் இக்கால வேலை சமதர்ம சமூகத்தில் இருக்கவே இருக்காது. வாழ்விற்கு வேண்டிய பொருள்கள் யாவும், உலகிலுள்ள மக்கள் 4மணி நேரம் உழைப்பாலேயே கிடைக்கக்கூடுமென பொருளாதார விற்பனர்கள் ஒரு கணக்கெடுத்திருக்கின் றார்கள். அதாவது, நாட்டிலுள்ள மக்களனைவரும் கல்விபெற வேண்டுமானாலும், யாத்திரை செய்ய வேண்டு மானாலும், சங்கீதம் பாடல் கேட்கவேண்டுமானாலும், நாடகக்காட்சி அனுபவிக்க வேண்டுமானாலும், நல்ல உணவு, நல்ல ஆடை, நல்ல வீடு பெறவேண்டுமானாலும், நல்ல புத்திரர்களை வளர்க்கவேண்டுமானாலும், உலகில் கிடைக்கக்கூடிய எல்லா அவசிய சுகபோகங்களை அனுப விக்கவேண்டுமானாலும், மனிதனுடைய 4மணிநேர உழைப்பே போதுமென மதிப்பெடுத்திருக்கின்றார்கள். இந்தச் செல்வாக்கு சமதர்ம சமூகத்தில்தான் கிடைக்கும்.

மற்ற நேரங்களை எவ்விதம் கழிப்பதென்று கேள்வி பிறக்கலாம். அதற்கு விடையாதெனில், மன உல்லாசம், விஞ்ஞான ஆராய்ச்சியில் உலலாசம் முதலிய சுகப்பேற்றை ஓய்வுநேரங்களில் யாவரும் அனுபவிக்கக்கூடும். இக்காலத் தில், இலட்சத்தில் ஒருவர்கூட இந்த உல்லாசப்பேற்றை அனுபவிக்க முடியவில்லையே! உலக யாத்திரை யாரால் செய்யமுடிகின்றது! விஞ்ஞான ஆராய்ச்சி யாரால் செய்ய முடிகினறது! அரசியல் இன்பத்தை யாரால்பெற முடி கின்றது! உலக சுகபோகங்கள் யாருக்குக்கிட்டுகின்றன!

இலட்சத்தில் ஒருவருக்குக்கூட கிட்டவில்லையே! ஆனால் சமதர்மத் திட்டத்தில் ஓய்வுநேரம் அதிகரிக்குமாகை யால், சகலரும் உயர்தர வித்தைகளைக்கற்று, வாழவை உயர்த்திக்கொள்ள அனுகூலமாகுமன்றோ! காலாகாலங் களாக வேலையின் ஆனந்தத்தை அனுபவிப்போர் சிலரே. ஆனால் சமதர் சமூகத்தில் உலகிலுள்ள யாவரும் அவர வர்கள்செய்யும் வேலைகளை ஆனந்தத்துடனே செய்யப் புகுவர். இது ஒன்றே உலகம் சுகம் உய்யபோதுமான தாகும்.

## சமதர்மத்தில் குடும்ப நிலைமை

பொருளாதார வித்தியாசமற்ற சமூகத்தில், ஆணுக் கும் பெண்ணுக்கும், சரி சமத்துவம் உண்மையாக ஏற் படும். பாரத ராமாயண காலமுதல் பொருளாதார வித்தி யாசம், ஆணுக்கும், பெண்ணுக்கும் இருந்து வந்தபடி யால், ஆண்மக்கள் பெண்மக்களை அடிமைகளாக்கிக் கொண்டு வந்தனர். இப்போது ரஷ்யாவைத் தவிர உலக முழுமையும் இந்தப் பொருளாதார வித்தியாசம் ஆணுக் கும் பெண்ணுக்கும் ஏற்பட்டுள்ளது. இந்த வித்தியா சத்தின் பயனாக, பெண்களுக்குச் சொத்துரிமையில்லை, வேலை உரிமையில்லை, சம்பாத்திய உரிமை இல்லை, மண உரிமை இல்லை, ஒற்றுமை இல்லாக் கல்யாணத்தை ரத்து செய்யும் உரிமை இல்லை, அரசியலில் சுதந்திர உரிமை இல்லை. இத்யாதி பலவீனத்தால் உலகிலுள்ள மக்களில் பாதிக்குமேற்பட்ட பெண்மக்கள் அடிமைகளாய் வாழ்ந்து வருகின்றனர். காலை முதல் இரவுவரை அடுப் பங்கரையில் உழைத்துவரும் துர்ப்பாக்கியம்பெற்ற பெண் கள் நிறைந்த குடும்பங்களில் என்ன அன்பு, என்ன

இன்பம் கிடைக்கும்? ஏழைக்குடும்பங்கள் இருக்கும் வரை, இவ்விரு குடும்பங்களில் பெண்களுக்குச் சரிசமத்து வம் இல்லாமல் இருக்கும்வரை, உலகத்திலுள்ள எந்த குடும்பமும் சுகமுற்று வாழமுடியாது. இந்தப் பொருளா தார வித்தியாசத்தில்தான் உலகிலுள்ள மக்களுக்குக் கவலை ஒழியாமலிருக்கின்றது. பணமில்லாத கவலை (திருடர், கொள்ளைக்காரர், கொலைக்காரர் முதலியவர் களால் நேரிடும் பயக்கவலை) பொருளாளிக்கும் இருந்தே வரும். ஒருவன் தயவால் கொடுக்கவும் மற்றொருவன் இல்லாமையால் வாங்கவுமாகிய நிலைமை அதாவது தரும மிடவும், தர்மத்தைப் பெறவும் நேரிடும் துர்ப்பாக்கியம் இந்தப் பொருளாதார வித்தியாசத்தால்தான் பண்டைக் காலமுதல், உலகத்தை நாசப்படுத்திவந்துள்ளது. புரு ஷன் கொடுக்கவும், பெண் வாங்கவும் நேரிட்ட வித்தியா சமே ஆணுக்குப் பெண் தாழ்ந்தவள் என்ற நிலைமையை உண்டாக்கியது. காலாகாலமாகப் பெண்கள் ஆணுக்குக் கீழ்ப்பட்டு இருப்பதற்குக்காரணம், இந்தப் பொருளா தாரவித்தியாசத்தால் நேர்ந்துள்ளதென அறியவேண்டும். இந்தப் பொருளாதார வித்தியாசம், உலகிலோ, சமூகத் திலோ, இருக்கும்வரை ஆணுக்குப் பெண் தாள் பணிந்தே நடக்கவேண்டிவரும். இந்தப் பொருளாதார வித்தியாசத்தை நீக்காமல், ஆணும் பெண்ணும் சரிசமத் துவம் பெறவேண்டுமென்பது வெறும் சொல்லேயாகும். இந்தக் கோரிக்கைப் பிறவிக் குருடன் சூரிய தரிசனம் செய்ய கோரும் கதையை ஒக்கும்.

சமதர்ம சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் அமைக்கப்படும் வேலையில் வித்தியாசமிராது. ஆணும் பெண்ணும் சரிசமத்துவமாகவே எந்த வேலையும் செய்ய

அணிவு பெறுவார்கள். வேலைக்குரிய ஈடும் இருவரும் சரிசமானமாகவே பெறுவார்கள். வாழ்விற்கு வேண்டிய அத்தியாவசியமான பொருள்களுக்கெல்லாம் இருவரும் சரிசமத்துவமாய்ப் பாத்திரமுள்ளவர்களாவார்கள். ஒருவனுக்கு மற்றொருவன் தாழ்ந்து வாங்க வேண்டுமென்பது சமதர்ம சமூகத்தில் கிடையாது. ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள பொருளாதாரவித்தியாசம் தொலைந்த அன்று முதல்தான் பெண்கள் தங்கள் பிறப்புரிமைகளாகிய எல்லாச் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றைப் பெறுவார்கள். அந்தப் பொருளாதார வித்தியாசம் ஒழியும்வரை, பெண்களின் அடிமைத்தனம் நீங்கவே நீங்காது. மற்ற முயற்சிகள் யாவும் காலப்போக்கே: ஆதலின், சமதர்ம சமூகம் ஒன்றில்தான் பெண்கள் ஆணுடன் சரிசமத்துவம் பெற முடியுமென அறிக.

சமதர்ம சமூகம் ஒன்றில்தான் பிள்ளைகளைப் பெறும் பேற்றினைப் பாக்கியமெனச் சொல்லக்கூடும். மற்ற சமூகங்களில்பிள்ளைகளைப் பெறுதல் (கோடானு கோடி மக்களுக்கு,) சுமை (Burden) என்று கூறல் வேண்டும். Children are burden to the Poor. அதாவது, "செல்வம் இல்லாதவாகளுக்கு பிள்ளைகள் பெரும் பாரம் என்றார் பெரியோர். இல்லாதான் வீட்டில் கர்ப்பம் தரிப்பது துக்கம். கர்ப்பம் தரித்துக் கர்ப்பத்தில் வளர்வதும் துக்கம். பெற்ற பிறகும் பிள்ளைகளை வளர்ப்பதும் துக்கம். வளர்த்த பிறகு கல்வி கேள்விகள் கொடுக்க முடியாததும் துக்கம். இத்யாதி துக்கங்களுக்கு இக்காலத் தாய்மார்கள் இரையாகின்றார்கள். இதற்குக் காரணம் என்னவெனில், பிள்ளைகளைப்பெற்று வளர்க்

கும் பொறுப்பு தாய்மார்களுடையதே என்று உலகம் எண்ணிவருவதுதான். பிள்ளைகளைப்பெற்று வளர்த்தல் சமூகப் பொறுப்பென்ற (Social Responsibility) மனப்பான்மையை ஆதரிக்கும் சமதர்ம சமூக மொன்றில்தான பிள்ளைகளைப் பெறுவதும், வளர்ப்பதும் தாய் செய்த பாக்கியமெனலாம். இக்காலத்தில் பிள்ளைகளைப் பெறவும், வளர்க்கவும் செல்வம் பெற்றவர்கள் மிகவும் சிலரே. எல்லாச் செல்வமும் படைத்த இல்லாளே பாக்கியம் படைத்த தாயாவாள். ஆனால் பொருளாதாரச் சமத்துவப்பெற்ற சமதர்ம சமூகத்தில் எல்லாப் பெண்களும், பிள்ளைகளைப் பெறுவது பாக்கியமென்றே கருதுவார்கள்.

இரஷிய உலகில், கர்ப்பவதிக்குப் பிள்ளை பெறுவதற்கு முந்தியும் பிந்தியும் 6-வார முதல் 8-வாரம் வரை சம்பளத்துடன் விடுமுறை கொடுக்கின்றார்கள். விஞ்ஞான மருத்துவம் (Scientific Midwifery) இலவசமாகச் செய்கின்றார்கள். குழந்தைகள் வளரும் கழகங்கள் (nurseries, creche) நாடுமுழுதும் நிறைந்துள்ளன. ஒவ்வொரு தொழிற்புரியும் தொழிற்சாலையின் அருகேயும் இந்தக் கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கல்வி, உயர்தரக்கல்வி, தொழிற் கல்வி, தேசியக்கல்வி ஆகியயாவும் இலவசமே. இந்தச் சமதர்ம சமூகத்தில் ஒன்றில்தான், குழந்தைகள் அழுவதில்லையாம்! அரசாளும் ஸ்டாலினுடைய (Stalin) பிள்ளையாயிருந்தாலும், கைத்தொழில் புரியும் மிலிகாப் (Milikoff) பினுடைய பிள்ளையாயிருந்தாலும் யாவருக்கும் மருத்துவ சிகிச்சை ஒன்றே; வைத்திய முறையும் ஒன்றே; உணவும் ஆடையும் வீடும் ஒன்றே. இந்தக் காரணங்களாலன்றோ (Russia is the paradise for

children) இரஷிய நாடு, குழந்தைகளுக்குக் குபேரநாடு என்று வழங்கப்படுகின்றது. எனவே இந்தநாடு ஒன்று தான் சமதர்ம நாடெனஅறிக.

இந்தப் பாக்கியத்தை மற்ற உலகம் பெறவே, நாம் உழைக்க வேண்டும். செல்வங்களனைத்தையும் பணக்காரர்கள் அபகரித்துக்கொண்டு, தங்களுடைய பிள்ளைகள் மாத்திரம், கல்வி, கேள்வி பெறுவதற்குக் கல்லூரிகளை அமைத்துக் கொள்வதும், ஏழை மக்களின் பிள்ளைகள் கல்விபெற ஒட்டாமல் தடைசெய்வதும் மானுஷிகத் தன்மையா எனக் கேட்கின்றோம்.

சுருங்க உரைக்கில், சகலருக்கும் போதுமான சமத்துவ உணவு, ஆடை, வீடு, கிடைக்க வேண்டுமானால் அவை சமதர்ம ஆட்சியில்தான் (Socialist Raj) பெற முடியும். தொழிலாளருக்கும், விவசாயிகளுக்கும் ஓய்வு நேரம் கிடைக்கவேண்டுமானால் சமதர்மத்தில்தான் கிடைக்கும். சகலரும் உயர்தரக்கல்வியைப்பெற்று, மூட ஜாதி, மூடமத நம்பிக்கை ஆகியவைகளிலிருந்து விடுபட வேண்டுமானால் அது சமதர்மஆட்சி மூலமாகத்தான் முடியும். பெண்கள் ஆணுடன் சமத்துவம் பெறவேண்டுமானாலும் சமதர்மத்தில்தான் அனுகூலப்படும். இனி வரும் சந்ததியாரை, பஞ்சத்திலிருந்தும் பட்டினியிலிருந்தும், நோயிலிருந்தும், அகால மரணத்திலிருந்தும் விடுவித்து,உலகை அழகுபெறச் செய்யவேண்டுமானால் அது சமதர்மத்தில்தான் கூடிவரும். நமக்குப் பின்னால் உலகம் ராக, துவேஷ, மோகமற்று, சண்டையற்று, போரற்று, உலகமக்கள் அன்புடன் கூடி வாழவேண்டுமானாலும் அது சமதர்ம ராஜ்ய மூலமாகத்தான் முடியும். உலகம்

இப்பேற்றைப்பெற இக்காலத்தில் வழங்கிவரும் கொடிய பொருளாதார வித்தியாசத்தினை முற்றிலும் மாற்றி, சமதர்ம ராஜ்யத்தை ஸ்தாபித்தல் வேண்டும். இக்காலக் கொடிய திட்டத்தை மாற்றும் வகையையும், சமதர்ம ஆட்சியினை ஸ்தாபிக்கும்மார்க்கத்தையும் இனி எடுத்துக் காட்டுவோம்.

---

# மூன்றாவது அத்தியாயம்.

---

## சமதர்ம ஆட்சி முறை

இதுவரையில் சுயராஜ்யப்போக்கையும் சமதர்மத்தின் இலட்சணங்களையும் சுருங்க உரைத்தோம். இனி சமதர்மத்தைக் கோரும் மக்கள் சமதர்ம ராஜ்யத்தை அடைந்தால்தான் இவ்வுலகப்பேற்றை யாவரும் சமமாக அடையமுடியும் என்பதையும், அதனையடையும் மார்க்கத்தையும் சுருக்கி விளக்கிக் காட்டுவோம்.

மக்களுக்கு என்ன வேண்டும்? உணவு, ஆடை, வீடு, கல்வி, வேலை ஆகிய இவ்வைந்தே மாந்தருக்கு முக்கியமாக வேண்டியவை. இவ்வைந்து அவசியங்களில் ஏதேனும் ஒன்று போதுமானதாக இல்லாவிடினும், மக்கள் வாழ்வு குறைவுபட்ட வாழ்வேயாகும். உலகிலுள்ள 200கோடி மக்களில் இரண்டொரு கோடி மக்களே இவ்வைந்து அவசியங்களையும் மிகுதியாகப் பெற்றுள்ளனர். மற்ற 198 கோடி மக்களுக்கு இவ்வைந்தில் யாதேனுமொன்றாகிலும் இல்லாமலிருக்கும். உண்மையில் இந்தப் பெரும்பான்மையான மக்களுக்கு இவ்வைந்தும் குறைவுபட்டும், முற்றும் இல்லாமலும் இருப்பதால் அவர்களின் வாழ்வு சாதாரணமாக அற்பவாழ்வாகியும் துக்கம் நிறைந்ததாயுமிருக்கின்றது. கடவுள் இருப்பினும் இல்லாவிடினும், மதங்கள் இருப்பினும் இல்லாவிடினும், ஜாதி இருப்பினும் இல்லாவிடினும், உணவு, ஆடை, வீடு, கல்வி, தொழில், உண்மை, அழகு, இன்பம் ஆகிய இவைகள்

மக்களுக்கு நிரம்பி இருத்தல் வேண்டும். மற்றப்பொருள்கள், மக்களுக்கு அனாவசியம். மற்றவையெல்லாம் இவ்வைந்து அத்தியாவசியங்களுக்குப் பின் செல்பவை. இதனை "Food, raiment, shelter, knowledge, labour, truth, beauty and love are primary wants of life and all the rest are either secondary or unnecessary" என்று கூறுவதுண்டு. அதாவது, உணவு, ஆடை, வீடு, கல்வி, தொழில், உண்மை, அழகு, இன்பம் ஆகியவை மனித வாழ்வுக்கு முக்கியமானவை என்றும், மற்றவையாவும் பின் செல்பவை, அல்லது அனாவசியமானவை என்றும் கூறுவர்.

உலகில் இவற்றை அறிந்து, அரசியலை நடத்துவோர் ஒருவருமில்லை. ராமராஜ்யம், அல்லது பாரத ராஜ்யம் முதல் இந்நாள் வரை, இம்மாபெரும் வாழ்வின் தத்துவத்தை (This great philosophy of life) உணர்ந்து நடந்த அரசு ஒன்றேனுமில்லை. சண்டையிலும், போரிலும், கேளிக்கையிலும், வீண் ஆடம்பரங்களிலும், (vanities of life) அதாவது, வாழ்வின் வியர்த்தங்கள் என்றுகூறும் விஷயங்களில் கவனத்தைச் செலுத்தி ராஜ்யங்களை நடத்தி வருகிறார்களே ஒழிய, மக்களுக்கு உணவு போதுமா? ஆடை போதிய அளவில் கிடைக்கின்றதா? வீடு வசதிகள் நிறைந்துளவா? யாவரும் மெய்ஞ்ஞானக் கல்வி அடைந்து வருகின்றார்களா? தொழில் புரிகின்றனரா? உண்மையாக வாழ்கின்றார்களா? அழகை மதிக்கின்றார்களா? இன்புற்று வாழ்கின்றார்களா? என்னும் விஷயங்களில், பண்டைக்காலமுதல் நாளைவரை, எந்த

ராஜ்யமும் கவனத்தைச் செலுத்தி வந்ததில்லை. வேத காலமுதல் நேற்று புராணகாலம் வரை, உண்டான வேத வேதாந்தங்களும், சாஸ்திர புராணங்களும், நீதிநியாயங் களும், சரித்திர இதிகாசங்களும், இறந்தபிறகு மோட்சத் திற்கு வழி காட்டுவதற்கும், சிலருடைய சொத்துகளைப் பாதுகாப்பதற்கும் வீண்சண்டை, வீண் போர் முதலிய வற்றால் மக்கள் மாள்வதற்கும், அரசர், அமைச்சர், அவர் கள் சந்ததியார் ஆகியவர்களின் பெருமைக்காக எழுதப் படுகின்றனவேயொழிய, பொதுமக்கள் உண்ண உணவு, உடுக்க ஆடை, இருக்க வீடு, அடைய கல்வி, உழைக்க வேலை முதலிய விஷயங்களைப்பற்றி எந்த சாஸ்திரமும், எந்த வேதவேதாந்தங்களும், மதங்களும், இதிகாசங்க ளும் வரைந்திருப்பதைப் பார்த்திலேம்.

பிராமணர், புரோகிதர், மதாச்சாரியார்கள், (Bishops), ஆர்ச் பிஷப்ஸ் (Archbishops) மௌலானாக்கள், மடாதிபதிகள் ஆகியவர்கள் தங்கள் சுகபோகங்களுக்கு எல்லாவித சாஸ்திரங்களையும் உண்டாக்கிக் கொண்டார் களே ஒழிய கோடாகோடி பாமர மக்களின் சுக வாழ் வுக்குவேண்டிய எதையும் உண்டாக்கவில்லை. மேலும் அவர்கள் அந்தச் சாஸ்திரங்களால் எந்தவித ஞானத் தையும் பெறவில்லை. அந்த ஞானத்தைப் பெற்றுள்ளவர் களை ஆதரிக்கவுமில்லை. எந்தப் பாதிரி, அல்லது எந்தப் புரோகிதன், அல்லது எந்த முல்லா, ஒருகைப் புல் விளைந்த இடத்தில், இரண்டு கைப்புல் விளைவிக்க, எந்த நூலை இயற்றியுள்ளான்? எந்த மகாத்மா அல்லது எந்த வேதாந்தி பத்து மனிதர்களைக்கொண்டு செய்யப் படும் ஆடையை ஒரு மனிதனைக்கொண்டு செய்யும்படி

யான இயந்திரத்தைக் கண்டுபிடித்துள்ளான்? இந்தக் காலத்திலுமில்லை, எந்தக் காலத்திலுமில்லை. ஏன்? இவர்களும் இவர்கள் மரபினரும், உண்ணவும், உடுக்கவும், இருக்கவும், படிக்கவும், சோம்பித்திரியவும், வழி தேடிக் கொண்டிருப்பதாலென அறிக. செல்வசம்பத்தை அடைய அதற்கு வேண்டிய வசதிகளாகிய, சட்டதிட்டங்கள், பலவித பாதுகாப்புகள், போலீஸ் பந்தோபஸ்துக்கள், கோர்ட்டு கொத்தளங்கள் முதலியவற்றையும், தனகர்த்தர் களையும் அவர்கள் தங்கள் இஷ்டம்போல் அமைத்துக் கொண்டார்கள். ஆனால் மற்ற கோடா கோடி மக் களை, அந்தகார இருளில் வைத்துக்கொண்டு அவர்கள் பூசை, நைவேத்தியம், திதி, தெவசம், விக்கிரக ஆரா தனை, உற்சவம், கோவில், குளம், அவைகளுக்கு வாண வேடிக்கை முதலிய வீண் ஆடம்பரங்களில் உழன்று கிடக்க, வேதநூல்களையும், ஆசாரங்களையும், மத வேற் றுமையையும் ஜாதிவேற்றுமையையும், மூடபக்தி, மூடநம் பிக்கை, மூட பழக்கவொழுக்கங்கள், விக்கிரகப் பூச் சாண்டிகள் முதலியவற்றையும் அமைத்து அவர்களைக் கெடுத்து விட்டனர். இத்தியாதி மோசத்தால் பெரும் பான்மை உலக மக்கள், தங்கள் உரிமைகளை மறந்து, அடிமைகளாகி, பசியாலும், பிணியாலும் வருந்தி வாடு கின்றனர்.

எந்த நாட்டிலும், அரசுபுரியும் ஜாதியாரே எல்லா செல்வாக்கையும், சம்பத்தையும் அடைந்து வருகின்றார் களே யொழிய, சாமான்ய மக்களுக்கு எந்தப்பாக்கியமு மில்லை. ஏனெனில், சாமான்ய மக்களுக்கு, நிகழும் எந்த அரசியலிலும் நேரான ஆதிக்கமில்லாமையாலென அறிக. ஆதலின் எந்தக் கட்சியினராயினும், அவர்கள்

காங்கரஸ் கட்சியினராயினும், திராவிடக் கழகத்தாராயினும் அல்லது மிதவாதிகளாயினும், அல்லது சமயவாதிகளாயினும், அல்லது வேறுஎந்தக் கட்சியினராயினும் அவரவர்கள் கோரிக்கையும் உத்தேசங்களும் (Aims and Ideals,) நிறைவேற வேண்டுமானால், அரசியல் ஆட்சியைக் கைப்பற்றவேண்டும். அரசியலைக் கைப்பற்றினாலொழிய எந்தக் கட்சியும் எவ்வித நன்மையும் பெறமுடியாதென அறிக. எனவே, சுயமரியாதைக்காரராயினும் சரி, அல்லது சமதர்மிகளாயினும் சரி, அவரவர் கோரிக்கைகளை நிறைவேற்றவேண்டுமாயின், அரசியலில் பெரும்பான்மை ஆதிக்கம் (Majority Rule) பெற வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும்.

## அரசியல் ஆதிக்கம் அவசியம்

இன்று, பிற்போக்குக்கட்சிகள் உலகமெங்கும் நிறைந்திருப்பதற்கு என்ன காரணமெனில், இந்தக்கட்சிகள் அரசியலில் பெரும்பான்மை ஆதிக்கத்தை (Majority Rule) பெற்றிருப்பதாலென அறியவேண்டும். இன்று, முதலாளி கட்சிகள் உலக சம்பத்துகளைப்பெற்று வாழ்வதும் அரசியல் ஆதிக்கத்தாலென அறிதல் வேண்டும். பஞ்சமர்களும், பாமர மக்களும் உலகசம்பத்தில் சம செல்வாக்கைப்பெற வேண்டுமானால், இவர்களும் அரசியல் ஆதிக்கத்தைப் பெற வேண்டும். மகாத்மாக்கள் பட்டினி கிடப்பதாலும், இல்லாதர் கோவிலில் நுழைவதாலும், பாமரமக்களை அரிஜன் என்று அழைப்பதாலும், அவர்கள் எவ்வித செல்வாக்கும் செல்வமும்பெற முடியாது. இவ்வழிகளெல்லாம் பாசாங்கும் பகல் வேஷமுமென அறிக.

## ஜாதி சமயம் ஒழிக்கும் வழி

வெறும் பிரச்சாரத்தாலும், மகாநாடுகளாலும், பாமர மக்கள் சுகவாழ்வைப் பெறமுடியாதெனவும் அறிக. ஜாதியை ஒழிக்கவேண்டுமாயின், அரசியல் மார்க்க வழியாகத்தான் ஒழிக்க முடியும். அரசியல் திட்டமின்றி, ஜாதி நாட்டை விட்டு அகலாது. ஜாதியைவிட்டவர்கள் சில அனுகூலங்களைப்பெற கடந்த 200-வருஷங்களாகப் பாடுபட்டதும், ஆயிரக்கணக்கான பிரசங்கங்கள் செய்ததும், இக்காலத்தில் சீர்திருத்தக்காரர்கள் முயற்சி செய்வதும் பயனற்றுப்போயின, ஒன்றும் கைகூடவில்லை. இந்திய சீர்திருத்தக்காரர்கள், தாங்கள் செய்து வந்த பிரச்சாரங்களோடு அரசியல்உலகைக் கைப்பற்றியிருப்பார்களேயாமாயின், அவர்கள்கோரிவந்த சீர்திருத்த எண்ணங்கள் யாவும், கைகூடி வந்திருக்கும். நாம், சாரதா சட்டமொன்றைச் செய்யப்பட்ட பாட்டை நோக்கினால், சீர்திருத்தக்காரர்களுக்குப் போதுமான அரசியல் ஆதிக்கம் இல்லை என்பது புலப்படும்.

மதங்களை ஒழிக்க வேண்டுமாயினும் அரசியல் மூலமாகத்தான் ஒழிக்கமுடியும். சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இந்து மதஸ்தாபன சட்டமும் அரசியல் ஆதிக்கம்பெற்ற ஜஸ்டிஸ் கட்சியால் நிறைவேறியது. மதத்தை நிலைநிறுத்துவதற்காயினும், அல்லது ஒழிக்கவாயினும், எதையும் அரசியல் துறைமூலமாகத்தான் செய்யமுடியும். எந்த நன்மைபெறவேண்டுமானாலும் அல்லது எந்த நன்மையைச் செய்யவேண்டுமாயினும் அரசியல் துறையொன்றின் மூலமாகத்தான் செய்யமுடியும். அரசியல் ஆதிக்கத்தால் (Political power) உலகை இரட்சிக்கவும்

கூடும்; அல்லது அழிக்கவும்கூடும். ஆனால் சமதர்மிகள் மாத்திரம்தான் இனி உலகை இரட்சிக்கத்தகுந்தவர்கள். அவர்கள் திட்டமொன்றே உலகப் பசிப்பிணியைப் போக்கவல்லது. ஆதலின் அவர்கள் அரசியலைக் கைப்பற்றல், அத்தியாவசியமென்பது வெளிப்படை. சமதர்மிகள், அரசியலைக்கைப்பற்றும்வரை மதங்களுக்கும் அழிவில்லை, ஜாதிக்கும் அழிவில்லை, பசிப்பட்டினிக்கும் குறைவில்லை. அந்நாள்வரை கலப்பு மணங்களும், கலப்பு உண்ணுதலும் சொல்லளவிலேயே நிற்கும்.

## ஜாதிமத பாதுகாப்பால் வருங்கேடு

முதலாளி அரசுகள் யாவும் மதங்களையும், ஜாதி சமய ஆசாரங்களையும் பாதுகாக்கும் தன்மையிலேயே இருந்து வருகின்றன. மூடப்பழக்கவொழுக்கங்களை அனுசரித்தே வருகின்றன; அவனவன் இஷ்டப்படி, மூடநம்பிக்கையில் இருந்துவரலாம் என்று சட்டதிட்டங்களும் செய்துள. இத்தியாதி சட்டதிட்டங்களையும்,மனப்பான்மைகளையும், அரசியல் வாழ்க்கையிலிருந்து ஒழித்தாலொழிய, மக்கள் வாழ்க்கைப் பரிசுத்தப் படப்போவதில்லை. இதற்காகவே, சமதர்மிகள் அரசியல் துறையில் இறங்கவேண்டுவது அவசியமாகும்.

Freedom of religious worship—அதாவது அவனவன் இஷ்டப்படி தனது தெய்வத்தை வணங்கலாமென்பதை அறவே ஒழிக்க, உலகில் சமதர்மிகள் ஒருவரே கடமைப்பட்டுள்ளனர். ஏனெனில் இது, முதலில் சுதந்திரமே ஆகாது. ஒருவன் மடத்தனத்தில்தான் இருப்பேன் என்பது கொடுமையினும் கொடுமையாகும். இரண்

டாலது, இந்த மனப்பான்மைகள்தான் மதச்சண்டை களையும், சமயப் போர்களையும் விளைவித்து, மக்களை வருத்தி வருகின்றன. மூடப்பழக்க வொழுக்கங்களும் இவைகளினாலேயே நிலைத்து வருகின்றன. இந்தப் போலி சுதந்திரத்தைக்கொண்டு கொடுங்கோல் அரசுகள் நீடித்து வருகின்றன. பெரும்பான்மை மக்களுக்குப் பகுத் தறிவு தோன்றாமலிருக்கச் செய்து வருவதும் இந்தப் போலி சுதந்திரமே. இந்தப் பாழும் சுதந்திரம் பஞ்சமா பாதகத்தைவிட பெரும் பாதகமென்றே எண்ணவேண் டும். எப்படி எனில், இந்தச் சுதந்திரத்தின் பேரால் அரசுகள் செய்யாத கொடுமை இல்லை. ஆயிரம் வருஷங் களாகக் கிருஸ்து உலகமும், மகமதிய உலகமும், கொடும் போர் புரிந்து வந்தது, இந்தப் போலி மத சுதந்திரத்தின் பேரால் எனவறிக. இன்றைக்கும் நமது நாடு முழுமையும், இந்துக்களும் மகமதியர்களும் தலையை உடைத்துக் கொள்வதும், இந்தக் கொடும் சுதந்திரத்தினாலென வும் அறிக. இவ்விதக் கொடுமைகள் இந்தச் சுதந்திரத் தின் பேரால் உலகில் நிகழ்வதால், மேல்நாட்டில் தொழி லாளர் அரசு வொன்றே இந்தக் கொடிய சுதந்திரம் அபி னிக்கு ஒப்பாகுமென்ற உண்மையை யுணர்ந்து அதற் குரிய அரசியல் பாதுகாப்புகளை அறவேவொழித்து விட்டிருக்கிறது. கடவுள் நம்பிக்கை எல்லா மூடநம்பிக் கைகளையும்விட மாபெரும் மூடநம்பிக்கையாகும். இந்த நம்பிக்கை நமது நாட்டைவிட்டு ஒழிய வேண்டுமானால், சமதர்மிகள் அரசியல் ஆதிக்கம் பெறவேண்டும்.

அவனவன் ஜாதி அவனவனுக்கு உரியதெனும் பாது காப்பையும் உடைத்தெறிய வேண்டும். ஜாதிச் சண்டை களில் நாங்கள் தலையிடமாட்டோமென்று பாசாங்குச்

செய்யும் அரசின் மனப்பான்மையைத் திருத்தவும் வேண்டும். (Neutrality in religions and caste matters). ஜாதிமத நடுநிலைமை என்பதெல்லாம் ஒரு ராஜதந்திர மென அறிக. "எவன் எப்படி கெட்டாலும் என் ராஜாங்கம் நிலைத்திருந்தால் போதும்" என்ற தந்திர மனப்பான்மைக்கு இதுவோர் அடையாளம். ஜாதியும், மதமும் சமதர்மிகளுக்கு Anathema, அதாவது விலக்க வேண்டியவைகளாதலால், அரசியல் ஆதிக்கத்தைப் பெற்றாலொழிய, இதனை ஒழிக்க முடியாது. (Public life) பொதுவாழ்க்கையிலிருந்தும், பொது ரிகார்டுகளிலிருந்தும் (Public Records) ஜாதிப் பெயர்களை நீக்காதவரை, ஜாதி நாட்டைவிட்டு அகலுமென்பது வீண் எண்ணமே. இதனை நீக்க, சமதர்மிகள் அரசியல் துறையில் நுழைய வேண்டும்.

## பெண்கள் சுதந்திரம் பெறும்வழி

பெண்கள் சுதந்திரம் பெறுவதற்கும், அரசியல் மூலமாகச் சட்டதிட்டங்கள் செய்தாகவேண்டும். அல்லாக்கால் புராணக்கொடும் பழக்கவொழுக்கங்களில் ஆழ்ந்து கிடக்கும் நமதுநாட்டு மக்கள், நமது தேசத்தில், தங்களுக்குச் சமத்துவமாகப் பெண்களைச் சுதந்திரத்துடன் நடத்தமாட்டார்கள்: பெண்களை, அடிமைகளைப் போலவே நடத்தவேண்டுமென்ற மனப்பான்மை ஆண்டாண்டுகளாக நமது நாட்டு மக்களிடையே குடிகொண்டு வந்திருக்கிறது. அந்த மனப்பான்மை வெறும் சொற்களாலும், வேண்டுகோளாலும், சாத்திர மேற்கோள்களாலும் நீங்காது. விதவைகள் மறுமணம் புரிந்துகொள்ளலாமென்று, அநேக ஆண்டுகளாகப் பிரசங்கங்கள் செய்து

வந்தும், இதன் விஷயமாக, அரசியல் வெளியிலிருந்து ராஜாராம் மோகன்ராய், கிஷப் சந்திரசென், பந்தார்கர், வீரேசலிங்கம் பந்தலு முதலிய பெரியோர் பாடுபட்டு உழைத்து வந்தும், விதவைகள் மறுமணத்தைத் தேசம் அங்கீகரிக்கவில்லை. ஆனால், சட்டமூலமாக இரண்டொருவரியால் விதவைகள் மறுமணம் புரிந்துகொள்ளலாம், அதனால் தங்கள்உரிமைகள் யாதொன்றும் போகாதென வரைந்த மாத்திரத்தில், விதவை மறுமணம் சட்ட வரம்பிற்குட்பட்டதாயிற்று. இதுபோலவே ஜாதியை விட்டவர்களுடைய உரிமைகளும் ராஜிய திட்டத்தினால் பாதுகாக்கப்பட்டன. ஆதலினால் இனி சாதி, சமயங்களின் கொடுமைகளை நீக்கவேண்டுமானால், அரசியல் துறையில்தான் இறங்கவேண்டும்.

## மூடநம்பிக்கைகள் ஒழியும் வழி

மதங்களைஒழிக்கவும்,ஜாதியை நாட்டைவிட்டோட்டவும், பெண்மக்கள் ஆணுடன் சகல சமத்துவம் பெறச் செய்யவும் அரசியல் ஆதரவு வேண்டுமென்ற அவசியத்தைக் குறிப்பிட்டோம். பில்லி, சூன்யம், (Witchcraft and Sorecery) சோதிடம், குறிச்சொல்லுதல், பிரார்த்தனை, பலி, மந்திரம், தந்திர முதலிய மூடநம்பிக்கைகளினின்று மக்களை விடுவிக்கவேண்டுமானாலும் அரசு புரிவோர்களால்தான் செய்யமுடியும். இம் மூடநம்பிக்கைகளால் கோடிக்கணக்கான பாமரமக்கள் மந்திரக்காரர், தந்திரக்காரர் முதலியவர்கள் செய்யும் மோசத்திற்குட்பட்டு, மெய்ஞ்ஞான சிகிச்சைசெய்து கொள்ளாமலே வருஷாவருஷம் இலட்சக்கணக்காக வீணே மடிகின்றனர். இவ்வித மரணத்தால் நாட்டிற்கு உண்டாகும் பொருளா

தார கஷ்டம் கோடிக்கணக்கில் என்று சொல்லவேண்டும். இந்த மூடநம்பிக்கைகளிலிருந்து மூட மக்களை மீட்பது சமதர்மிகள் கடமையாகும். இந்தக் கடமையைச் செலுத்த வேண்டுமோனாலும், அரசாங்கத்தால்தான் முடியும்.

இதுவரை, சமூக ஊழல்களாகிய மதம், ஜாதி, மூட நம்பிக்கை, பெண்களின் கஷ்டம் நிலைக்கச் செய்துவரும் பாதுகாப்புகள் முதலியவைகளைக் களையவேண்டிய மார்க்கத்தைச் சுருங்க எடுத்துக் காட்டினோம். இனி சமதர்மத்திற்கே நேர் விரோதமாயுள்ள பாதுகாப்பினை எடுத்துரைத்து, அதனை நீக்கும் மார்க்கங்களையும் சுருங்க எடுத்துரைப்பாம்.

தனிவுடைமைப் பாதுகாப்பு

இனி வரும் நமது இந்திய அரசியல் திட்டத்தில் (Indian Constitution), அவனவன் சொத்து எதுவாயினும் அதுபாதுகாக்கப் படுமெனத் திட்டம் செய்துள்ளார். இது அமெரிக்கர் திட்டத்திலிருந்து, நகல் செய்யப்பட்டது. இதுவரை இந்தத் திட்டம் இந்தியாவிலாகிலும், அல்லது பிரிட்டிஷ் அரசியல் திட்டத்திலாகிலும் இல்லை. பொதுவுடைமை உலகில் பரவிவரும் விசையைக்கண்டு தனிவுடைமைக்காரர்கள் இத்திட்டத்தை அவரவர் ஊர்களில் அமைத்துக்கொள்கின்றார்கள் போலும்! ஆங்கிலத்தில் Each man for himself, the devil takes the hindermost" என்று ஒரு புராணப் பழமொழியுண்டு. அதாவது அவனவனே தன்னைக் காப்பாற்றிக் கொள்ளட்டும்; இளைத்தவன் எந்தக்கதி

அடைந்தாலும் அடையட்டும் என்பது இதன் பொருள். இதன் கருத்தைச் சற்றுக் கவனிப்போம். மோசத்தாலானாலும் சரி, வஞ்சத்தினாலானாலும் சரி, பலரை வஞ்சித்ததிலானாலும் சரி, கொள்ளை அடித்ததிலானாலும் சரி, கொன்றதினாலானாலும்சரி, எந்தவிதத்தில் பொருள் சேமிக்கப்பட்டாலும் சேமிக்கப்பட்ட சொத்து சேமித்தவனுடையதே. இந்தச் சொத்தை அரசாங்கமும் தொடப்படாதென்பது இதன் கருத்து. போரில் ஜெயித்த வரைப் பங்கிட்டுக்கொண்ட நிலமானாலும், நீரானாலும் இதையும் தொடப்படாது. எவன் பங்குக்கு வந்ததோ, அவனதல்லாமல், அவனுடைய ஏழேழு தலைமுறையும் அவனது சந்ததியாருடையதாம்! இவ்விதமாகத்தான், இப்போதுள்ள அரசர்களுக்கும் ஜமீன்தார்களுக்கும், மிராசுதார்களுக்கும் சுரோத்திரியம்தார்களுக்கும், தற்போதுள்ள சொத்தெல்லாம் பாவிக்கப்பட்டு வருகின்றனவென அறிக. இவ்விதச் சொத்துகளின் வருமானத்திலிருந்து சேமிக்கப்படும் சொத்தும் இத்தகையதே. சொந்தக்காரன் அல்லாமல் அவனுடைய சந்ததியாருக்கும் சொந்தமாம்!

ஒன்றுக்குப் பத்தாக வட்டி சம்பாதித்துச் சேர்த்த சொத்தும் தனிவுடைமையே. ஒரு வேலையும் செய்யாமல் வீட்டுவாடகையால் வரும் செல்வமும் தனிவுடைமையே. ஆயிரக்கணக்கான தொழிலாளிகளுக்கு அரைகூலி கொடுத்து, தொழிற்சாலைகள், பஞ்சாலைகள், இரும்புத் தொழிற்சாலைகள் இரயில் ஒர்க்ஷாப்புகள் முதலியவைகளிலும், மற்றும் பல Factories, workshops, Shipping yardsகளிலும்வரும் இலாபமுழுமையும்தனிவுடைமையே. கம்பெனிகளென்றும், பாங்குகளென்றும் பலர்சேர்ந்து வர்த்தகம்செய்து சம்பாதிக்கும் இலாபமனைத்தும் தனி

உடைமையே. பலர் மூலமாக ஒருவன் திரைகடலோடி சம்பாதித்த சொத்தும், தனிவுடைமையே. பலர் உழைப்பைக்கொண்டு சேமித்த செல்வமனைத்தும் தனிவுடைமையே. பொதுப்பணத்தால் B. A., M. A., பரிட்சை செய்து, லாயர்களாகவும், ஜட்ஜ்களாகவும், மந்திரிகளாகவும், கலைக்டர்களாகவும், கவர்னர்களாகவும் மற்றும் பல உத்தியோகஸ்தர்களாகவும் இருந்து சம்பாதித்த சொத்தும் தனிவுடைமையே; இவையாவும் தனிவுடைமையே. எந்த உழைப்புமின்றி, அகஸ்மாத்தாக வந்த சொத்தும் ஒருவனுடையதே. பந்தயம் மூலமாகவாவது, சூதாட்டத்திலாவது, திருவிளச் சீட்டென்று வழங்கும் லாட்ரியிலாவது வந்து குவியும் சொத்தும் ஒருவனுடையதே. இந்தச் சொத்துகளும் தனிஉடைமையே.

இவை எல்லா சொத்துகளையும்விட மாபாதகச் சொத்து ஒன்று உண்டு. அது இக்கால நாகரிகத்தில் உண்டானது. அது யாதெனில், உலகில் சண்டையைக் கிளப்பிவிட்டு, அதற்காகக் கடன்கொடுத்து, அந்தக் கடனுக்கு வரும்வட்டியால் கிரம்பும் சொத்தேயாகும். இதுவும் தனிச் சொத்தே.

இச்சொத்துகளின் முக்கிய இலட்சணம் என்னவெனில், ஏதோ ஒருவன் அரைவினாடி (A Single Second) உழைத்த உழைப்பால் சம்பாதித்த பொருளும், பேனாவைத் தொட்டு கை எழுத்து செய்ததால் (பேனாவைத் தொடுவதும் ஒரு உழைப்பே!) சம்பாதித்த பொருளும், எந்த உழைப்புமின்றி வட்டிக்கு வட்டி வாங்கியதால் கிடைத்த பொருளும், ஒருபைசா செலவிட்டு இலட்சக்கணக்கில் இலாபமாகச் சம்பாதிக்கும் பொருளும்,

ஒருமணிநேரம் பேச்சிக்கு ஆயிரம் ரூபாயாக வாங்கி, குவித்தபணக்குவியலும், சினிமாவுக்கு முகத்தைக்காட்டி இலட்சக்கணக்கில் பவுன் சம்பாதித்ததால் குவிந்த செல்வமும், மற்றும் இவைகள்போன்ற பல முறைகளில் சம்பாதிக்கும் பொருளும், குவிந்ததற்கு மூலாதாரமாயுள்ள தொழிலாளிகளுக்காகிலும், அவர்களின் சந்ததியாருக்காகிலும் சேருவதில்லை. எவனொருவன் சொந்தக்காரனென்று வழங்கப்படுகின்றானோ, அவன் சந்ததியாரைத் தான் சேரும். பிறந்த தினத்தன்றே கோடீஸ்வரனுக்குப் பிறந்த குழந்தை அந்தக் கோடீஸ்வரன் செல்வத்திற்கு உடையவனாகின்றது. இனி தனிஉடைமையின் முதல் இலட்சணம்.

இந்தத் தனிச்சொத்தை அதன் சொந்தக்காரன் எப்படி செலவிட்டாலும் இடலாம். கோடிக்கணக்கான பொன்னை அல்லது இலட்சக்கணக்கான தின்பண்டங்களை, அல்லது ஆயிரக்கணக்கான பாங்க் ஷேர்களைக் கடலில் கொட்டினாலும் கொட்டலாம்; கொளுத்தினாலும் கொளுத்தலாம்; அல்லது அழித்தாலும் அழிக்கலாம்! அல்லது குடியிலும், வெறியிலும், கூத்தி வேசித்தனத்திலும், வீண் ஆடம்பரங்களிலும், மோட்டார் வண்டிகளிலும், செலவிட்டாலும் இடலாம்!! அல்லது, மோட்சத்திற்காகச் சோம்பேறிகளுக்கும், கோயில் குளங்களுக்கும், சத்திரம், சாவடிகளுக்கும் செலவிட்டாலும் இடலாம்!!! ஆனால் இவ்வளவு சொத்துகளில், பொது மக்கள் கல்விக்காகிலும், சுகாதாரத்திற்காகிலும், வீடு வசதிகளுக்காகிலும், உணவு, ஆடை முதலிய விளை பொருளை அதிகப்படுத்துவதற்காகிலும் ஒரு இம்மி அளவேனும் செலவுசெய்ய கட்டாயப்படுத்தமுடியாதாம்.

பைத்தியக்காரனொருவன் தனது செல்வத்தைக் கடலில் கொட்டினாலும் அதனை ஏன்என்று கேட்கப்படாதாம்! இது இந்தத் தனிஉடைமையின் இரண்டாம் இலட்சணம். இவ்விதமாக உலக முழுமையுமே, இந்தத் தனிஉடைமை காக்கப்பட்டுவருகிறது. இந்தப் பாதுகாப்புக்குத்தான் இருக்கும் எல்லா போலீசும், மேஜிஸ்டிரேட்களும், கோர்ட்டு, கச்சேரிகளும், லாயர்,ஜட்ஜுகளுமென அறிக! இந்தச் சொத்துகளைப் பாதுகாப்பதற்குத்தான் இருக்கும் எல்லாஜெயில்களும்,ஜெயில் சூப்பிரிண்டெண்டுகளும், ஜெயில் வார்டர்களுமெனவும் அறிக!!

## தனிஉடைமையை உபயோகிக்க வேண்டிய விதம்

இத்தியாதி தனிச்செல்வம் உலகில் எவ்வளவு இருப்பதாகக் கணக்கிட்டிருக்கின்றார்களென்றால், உலகிலுள்ள 160-கோடி ஆண்பெண் மக்கள் ஒவ்வொருவருக்கும், போதுமானஉணவும், சீராக உடுத்திக்கொள்ள ஆடையும், சுகாதார வீடும், விஞ்ஞானக் கல்வியும், அதற்குமேல் உயர்தர வாழ்வுக்கு வேண்டிய சகவாசம் அளிக்கக்கூடிய உலக செல்வமெனப் பொருளாதார நிபுணர்கள் கணக்கெடுத்துத் தெரிவிக்கின்றார்கள். இதன்றியும், குழந்தைகளுக்குவேண்டிய பாலும், உயர்தர வாழ்வுக்கு வேண்டிய மின்சார விளக்குகளும், வீடுகளில் மேஜை, சோபா, நாற்காலி முதலியவைகளும், பீங்கான்,கோப்பை, வெங்கலப் பாத்திரங்கள் முதலியவைகளும், ஒவ்வொரு கிராமத்திலும் கேட்டு ஆனந்திக்க ஆகாயதொனிகளும், உலகிலுள்ள தனிச் சொத்திலிருந்து அமைக்கக்கூடும். ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும், புத்தகசாலைகளும், வாசகசாலைகளும், நந்தவனங்களும், மியூசியங்களும், கண்

காட்சிசாலைகளும் அமைக்கவும்கூடும். உலக மக்கள், உலகமுழுமையும் இலவசத்தில் யாத்திரைசெய்ய கப்பல், இரயில், மோட்டார், ஆகாயரதம் முதலிய வசதிகளை உண்டாக்கக்கூடும். இன்றுசிலரிடம் வீணே குவிந்துகிடக்கும், வீணே செலவிடப்படும், வீணே துர்விநியோகிக்கப்படும் தனிச் சொத்துகளால், உலகிலுள்ள மக்கள் வாழ்வுக்குவேண்டிய முக்கிய சுகபோகங்களை அனுபவிக்கலாமென்றால், இவ்வளவும் சிலரால் நாசமாக்கப்படும் காட்சி எவ்வளவு விசனிக்கத்தக்கது. இவவளவு நன்மை பயக்கக்கூடிய சொத்துகள் யாவும் நூற்றில் இரண்டுபேர் வசமே குவிந்துகிடக்கின்றன. ஆனால் இவ்வளவு செல்வத்திற்கும் மூலகாரணகர்த்தாவாயிருக்கும் நூற்றுக்கு 98பேர் பசியால் வருந்தவும்,பிணியால் சாகவும் நேரிடுகின்ற துர்ப்பாக்கியம் மிகவும் சகிக்கமுடியாதிருக்கின்றது. முதல் மகாயுத்தத்தில், (1914-1918)குண்டு பீரங்கிகளால் சாம்பலான உயிர்களைக்கொண்டும், செல்வங்களைக்கொண்டும், உலகிலுள்ள மக்கள் ஒவ்வொருவருக்கும் 5ஏக்ரா நிலமும், அதற்குவேண்டிய விதையும், கலைப்பை முதலிய ஆயுதங்களும் அமைத்துக்கொடுக்கக்கூடுமாம். இதன்றியும் மேஜை நாற்காலியுடனும் சமையல் பாத்திரங்களும்,தீபங்களும் நிறைந்த வீடு வொன்றை ஒவ்வொருவனுக்கும் கட்டிக்கொடுக்கலாமாம்! 60 வயதிற்கு மேற்பட்ட வயது சென்ற ஒவ்வொருவனுக்கும் old age pension என்று கூறப்படும் தள்ளாதார் உதவியை உதவலாமாம். ஒவ்வொரு கிராமத்திலும் குழந்தைகளைச் சுகாதாரவிதிப்படி வளர்க்க சிசுரட்சண விடுதிகளை அமைக்கலாமாம்! ஒவ்வொரு மக்களும், பால், தயிர், வெண்ணை உண்ண சௌகரியங்களை ஏற்படுத்தலாமாம். இவ்வளவு சுகபோகங்

களை அளிக்கக்கூடிய செல்வத்தை 4வருடச்சண்டையில் கரியாக்கிய அரசுகள், ஒவ்வொன்றிற்கும் அந்தச் சண்டை செய்ய என்ன பித்தம் பிடித்ததோ, அது யாருக்கும் விளங்கவில்லை.

இவ்வித உன்மத்த அரசுகளால், பாரத இராமாயண கால முதல் நாளது வரை உண்ணவேண்டிய உணவுகளும், இருக்கவேண்டிய வீடுகளும், அனுபவிக்கவேண்டிய மற்ற சுகபோகங்களும், வருடாவருடம் சம்பாலாய்ப் போகின்றன. இதற்கெல்லாம் மூதற்காரணமாயுள்ளது இந்தப் பாழும் தனிவுடைமையே!

## பொதுவுடைமை விளக்கம்

இவ்வளவு உலக விபர்த்தத்திற்குக் காரணம் தனிவுடைமை யென்றால், அதற்கு என்னசந்தேகம்? அதனை ஒழிப்பதற்காகிலும், அல்லது மாற்றுவதற்காகிலும் என்ன வழி? ஒரேவழிதான் உண்டு. அது யாதெனில் பலருக்கு உபயோகப்படவேண்டிய செல்வத்தைச் சிலரால் துர் உபயோகப்படுத்துவதை ஒழித்து பலருக்கும் உபயோகப் படும்படி செய்வதேயாகும். நிலத்தில் விளையும் செல்வமனைத்தும் நிலத்திற்குச் சொந்தக்காரனால், அல்லது அவனுடைய சந்ததியாரால் துர்விநியோகப்பட்டு வருகின்றன: நிலத்தில் வெட்டிஎடுக்கப்படும் பொன்,வெள்ளி, கரி, இரும்பு முதலிய உலோகங்கள் யாவையும் சிற்சிலரே சொந்தமாக்கிக்கொண்டு, மற்றவர்களுக்கு உதவாமல் தான்களும் தங்களுடைய சந்ததியாரும் அவற்றை வீணே உபயோகித்து வருகின்றார்கள். ஆனால், இந்நிலங்களை இவர்கள் உண்டாக்கினார்களில்லை. பிறக்கும்போது

கொண்டுவந்தார்களில்லை. இறந்தும்கொண்டுபோவது மில்லை. இவர்களில் யாரேனும் இந்தச் செல்வங்களை உண்டாக்க உழைப்பதுமில்லை. ஆனால் "சொந்தம்" (owner ship) என்ற வெறும் பழக்கச் சொல்லைக் கொண்டு (mere word of habit), அந்நிலங்களில் விளையும் செல்வங்களைத் துர்வினியோகித்து வருகின்றார்கள். இந்தத் துர்ப்பழக்கத்தை நிறுத்தவேண்டுமானால், விளையும் நிலங்களையும், தோண்டப்படும் சுரங்கங்களையும் பொதுவுடைமையாக்கவேண்டும். அதாவது பலருக்கு உபயோகப்படும்படி நிலங்களைப் பொதுமக்களால் உழுது பயிரிட்டு, அதில் விளையும் தானியங்களைப் பொதுவாக அந்தந்தக் கிராமங்களிலும், அந்தந்தப் பட்டினங்களிலும் களஞ்சியங்களில் சேமித்து, மக்கள் வயிறு நிரம்ப உண்ணுவதற்கும், உடுப்பதற்கும், வீடுவாசல் கட்டுவதற்கும், வினியோகப்படுத்தல்வேண்டும். ஆனால் இதன் சொந்தக்காரர்களாகிய நிலஞ்சுவான்தார்களும், அரசர்களும், ஜமீன்தார்களும், மிராசுதார்களும், சுரோத்திரியம் தார்களும், எப்படிப் போவதென்று கேட்கலாம். இவர்களும் இந்தப் பொதுவுடைமைத் திட்டத்தில் மற்றவர்களைப்போல் கவலை யாதொன்றுமின்றி, 4-மணி நேரம் மற்றவர்களைப்போல் உழைத்து, தாங்களும், தங்களது பிள்ளைகளும், தங்களது சந்ததியார்களும் பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டாக உண்டு களித்து வாழலாம். ஆனால் ஒன்று மாத்திரம் இவர்கள் ஆதிக்கத்திலிருந்து எடுக்கப்படும். அதாவது தங்கள் இஷ்டம்போல் செல்வங்களை நாசப்படுத்திவரும் ஆதிக்கத்தை இவர்களிடமிருந்து நீக்கப்படும். நிலம், நீர் உள்ள தனிவுடைமையைப்

பொதுவுடைமையாக்க வேண்டுமானால், அரசியலாதிக்கம் பெற்றவர்களால்தான் முடியும். இதற்காகவே சமதர்மிகள் அவரவர் தேசத்தில் அரசியல் ஆதிக்கம் பெறல் வேண்டும்.

உலகத் தொழிற்சாலைகள் ஒரு சிறுபான்மையோரால் அந்தந்த நாட்டில் சொந்தமாக்கப்பட்டு அவர்கள் இஷ்டம்போல் நடத்தப்பட்டும், நிறுத்தப்பட்டும் வருகின்றன. இந்தத் தொழிற்சாலைகளுக்குச் சொந்தமானவர்கள் உலகில் ஆயிரமக்களில் ஒருவர்கூட இல்லை. ஆனால் 999பேர், 7, 8, 9, 10 மணிநேரம் உழைக்கவும், ஒரு சொந்தக்காரன் அதன் இலாபத்தை அடையவும், இக்கால தனிவுடைமை நடத்தப்பட்டு வருகிறது இந்தத் தொழிற்சாலைகளை அவைகளின் சொந்தக்காரர்கள் கொண்டுவந்த முதலென்பார்கள். இந்த முதல் இல்லாமற்போனால் எதுவும் செய்யமுடியாதென்பார்கள். ஆனால் அந்த மூதல் எது? நிலம், நீர் இரும்பு, கரி முதலிய இயற்கைச் சொத்துகள் மனிதன் உலகில் தோன்றுவதற்கு முன்னரிருந்தே இருந்து வருகின்றன. அவைகளைப் பலமனிதர்கள் எடுத்துப் பாகுபடுத்தி, வேலைசெய்து, வீடுகளாகவும், தொழிற்சாலைகளாகவும், இயந்திரங்களாகவும், இரயில்களாகவும், கப்பல்களாகவும், மற்றும் பல கைத்தொழில் கருவிகளாகயும் செய்தபிறகன்றோ, அவை முதலாகின்றன. தற்செயலாக ஒருவன் ஆதிக்கத்தில் அம்முதல் வந்துவிட்டால் அவைகளைத் தனதென்று பாராட்டுகிறான். இந்தப் பாராட்டலை எதிர்க்காமல் பாமரமக்கள் அவனிட்ட கூலியைப் பெற்றுக் கொண்டு முதல் முதலைக்கொண்டு பல முதல்களைச் செய்துகொடுத்துவருகின்றார்கள். உண்மையில், எல்லாவித

முதலும் இயற்கைப்பொருள்களே. அம்முதலைக்கொண்டு பலபேர் உழைப்பால் வீடுவாசல்களும், கப்பல், இரயில், பொன், வெள்ளி, தொழிற்சாலை முதலியவைகளும் தோற்றுவிக்கப்படுகின்றன. எனவே உலகிலுள்ள பொருள்கள் அனைத்தும் அவைகளைப் பண்படுத்தின வர்களுக்கே உரியன. இதுதான் சமதர்ம நியாயம். ஆத லின் இந்தச் சொத்துகளைப் பொதுவுடைமையாக மாற்றுவதில் எவ்விதக் குற்றமும் இல்லை. இது தர்மமே யாகும். கைத்தொழிலுக்குரிய பண்டங்கள் பொது வுடைமையாகப் பாவிக்கப்படுமேயானால், அதனால் உண்டாகும் பயன் அனைத்தும் அதில் உழைப்பவர் களுக்கேசேரும். இந்தச் சொத்துகளுக்குச் சொந்தக் காரன் என்போனும் மற்ற உழைப்பவர்களைப்போல் தானும் ஒருவனாக இருந்து உழைத்து, எந்த விசாரமும் இன்றி உண்ணலாம். இதுதான் உத்தம புருஷனுக்கு அழகாகும்.

உலகத்திலுள்ள தனிவுடைமைத் தொழிற்சாலை களைப்பொதுவுடைமைத் தொழிற்சாலைகளாக மாற்ற அரசியல் ஆதிக்கம்பெற வேண்டுமாகையால்,சமதர்மிகள் அந்த ஆதிக்கத்தைப்பெற முயலவேண்டும்.

விளைவுக்கு வேண்டிய நிலங்களும், கைத்தொழிலுக் குரிய தொழிற் சாலைகளும், போக்குவரத்துக்குரிய இரயில், கப்பல்,மோட்டார் வண்டிகள் முதலியவைகளும், தந்தி, தபால் ஸ்தானங்களைப்போல் பொதுவுடைமை (common ownership)யாக ஆக்கப்பட்டு, இந்தஸ்தாப னங்களில் உழைத்துவரும் தொழிலாளர்களின் ஆட்சிக் குட்படுத்தப்பட்டு, இவைகளின் வருமானங்கள் யாவும் பொதுமக்களுக்கு உபயோகப்படுத்தப்பட்டாலொழிய,

உலகப்பசி, பிணி, அறியாமை முதலியன நாட்டைவிட்டாகிலும், உலகைவிட்டாகிலும் நீங்கப்போவதில்லை.

சமதர்ம ஆட்சியில், நாட்டிலுள்ள செல்வமனைத்தையும் ஐந்து முக்கிய விஷயங்களுக்கு விநியோகிக்கப்படும்.

(1) வேலைசெய்ய சக்தியுள்ள மக்கள் எல்லோருக்கும் வேலை உண்டாக்கி, அவர்கள் உணவுக்கு வேண்டியபொருள்களை அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

(2) உழைக்கமுடியாதவயது சென்றவர்களுக்கும், குழந்தைகளுக்கும் உணவு முதலியவைகளைக் கொடுத்து ஆதரிக்கப்படும்.

(3) கர்ப்பமான பெண்கள் யாவருக்கும் இரட்சணிய உதவி புரியப்படும்.

(4) மெய்ஞ்ஞானக்கல்வி யாவரும்பெறும்படிமெய்ஞ்ஞான ஸ்தாபனங்களும், கல்விச்சாலைகளும், கல்லூரிகளும் ஸ்தாபிக்கப்படும். யாவரும் உண்மை பேசவேண்டுமானால் உயர்தர பயிற்சி (culture) பெறச் செய்யவேண்டும்.

(5) யாவரும் உயர்தர வாழ்வை அநுபவிக்கும்படியாக நாடு முழுமையும் நகரமென்றும், கிராமமென்றும் வித்தியாசமின்றி, எவ்விடத்தும் வாத்தியம், சங்கீதம், ஆகாயத்தொனி, மின்சார விளக்குகள், சுகாதார ஸ்தாபனங்கள், ஆஸ்பத்திரிகள், குழந்தை வளர்க்குமிடங்கள், மியூசியங்கள், நந்தவனங்கள், படக்காட்சிகள், தோட்டங்கள் கண்காட்சிசாலைகள் முதலியவைகள் ஸ்தாபிக்கப்படும்.

இவ்விதவாழ்வின் அத்தியாவசியங்களுக்கு வேண்டிய செல்வம்,பொது நிலம், பொது நீர் ஆகியவற்றின் மூலமாக வும், தொழிற்சாலை மூலமாகவும், போக்குவரத்து மூல மாகவும், வர்த்தக மூலமாகவும் விளையும். பொருளாதார நிபுணர் எடுத்திருக்கும் கணக்கின்படி உலகில் விளையும் பொருள்களை விஞ்ஞான முறைப்படி விளைவித்து, செய் யப்படும் பொருள்களையும் விஞ்ஞானமுறைப்படிச் செய் வித்தால், இக்காலத்தில் உள்ள 200கோடி உலகமக்கள் 2000கோடி மக்களாகப் பெருகினபோதிலும், சாதாரண வாழ்விற்கு வேண்டிய உணவுப்பொருள்களையும்,உயர்தர வாழ்விற்குரிய கல்வி கேள்வி, சாகவாசம், சங்கீதம், பாடல் முதலியவைகளையும் அவர்கள் போதுமானவரை யில் அடையக்கூடுமாம். வேண்டுமென்ற கவலையே யாருக்கும் இல்லாமல் போகும். எனது பிள்ளை,குழந்தை கள் "என்ன கதியாகும்" என்ற விசாரம் உலகைவிட்டு ஒழிந்தேவிடும். பஞ்சம், கொள்ளைநோய், அகால வியாதி, அகாலமரணம் முதலியவை நாட்டினின்று நீக் கப்படும்.

## முடிவு

இக்காலத்தில் பொதுச்சொத்தாக இருக்கவேண்டிய செல்வத்தை அவனவன் சொந்தமாக்கிக்கொண்டு, அவ னவன் இஷ்டப்படிக் கையாண்டு வருவதால், உலக மக்க ளுக்கு, உலக செல்வத்தைச் சம்பூர்ணமாக அநுபவிக்க முடியாமல் போகின்றது. அவனவன் இஷ்டப்படி அவ னவன் வருமானத்தைச் செலவிடுகின்றான். அதனை நிகழும் தனி உடைமைத் திட்டத்தில் அடக்குவாரில்லை. இந்தத் தனிவுடைமைத் திட்டத்தில் அவனவன் சொத் தென்றும், அவனவன் செல்வமென்றும் வாதப்பிரதி

வாதம் செய்கின்றபடியால், கோர்ட்டுகள் வேண்டியிருக்கின்றன; ஜட்சுகளும், லாயர்களும் தேவைப்படுகின்றனர். இவ்வித வழக்குகளால் பலபேர் உழைப்பால் வந்த செல்வமனைத்தும் சோம்பேறிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. இதற்குத் திருஷ்டாந்திரம் வேண்டுமானால், ஒரு காலத்தில் தனிச்சொத்தாக இருந்தபல சிறியசொத்துகளை முனிசிபாலிட்டியும், ஜில்லா தாலுக்கா போர்டுகளும் பொதுச்சொத்தாகமாற்றி, கையாண்டு வருவதைப் பார்க்கலாம். முனிசிபல் கட்டிடங்கள், ரோடுகள், வாராவதிகள், முனிசிபல் விளக்குகள், சாக்கடை, கால்வாய்கள், குழாய்த் தண்ணீர் வசதிகள், முனிசிபல் பள்ளிக்கூடங்கள், நந்தவனங்கள், மியூசியங்கள், ஆகாயத்தோணிகள், ஓட்டல்கள், பாலங்கள், மின்சார விளக்குகள், இரயில்வேக்கள், டிராம்கள், பஸ்கள், கக்கூஸ்கள், முதலிய சிறிய சொத்துகள்யாவும் பொதுவுடைமையாக்கப் பட்டிருக்கின்றன. ஆனால், தனிவுடைமைக்காரர்களாகிய முனிசிபல், ஜில்லா, தாலுக்கா போர்டு உத்யோகஸ்தர்கள், சேர்மன், வைஸ்சேர்மன், கமிஷனர், பிரசிடெண்டு, வைஸ்பிரசிடெண்டு, ஹெல்த்ஆபீசர், இன்னும் மற்ற சிப்பந்திகள் முதலியவர்களின் மனப்பான்மையால் பொதுமக்கள் இத்தியாதி சொத்துகளின் முழுப் பயனை அநுபவிக்கமுடியாமற் போகின்றது. இருந்தாலும், இத்தியாதி சொத்துகளின்பேரில் வழக்கில்லை, வில்லங்கமில்லை, சண்டை சச்சரவில்லை, வாதப் பிரதிவாதமில்லை, உனது எனதென்ற வித்தியாசமில்லை, வியாஜ்யமில்லை; யாவருக்கும் பொதுவாகவும் கருதப்படுகின்றன, யாவருக்கும் பொதுவாகப் பரிபாலித்து வரப்படுகின்றன, யாவருக்கும் பொதுவாக உபயோகப்படு

கின்றன. இந்த விஷயங்களில் யாதாகிலும் குறைவு இருந்தால் தனிவுடைமைக்காரர் பரிபாலத்தின் தோஷமே ஒழிய, பொதுவுடைமையால் யாதொரு தோஷமுமில்லை.

பொதுவுடைமை மனப்பான்மையோடு இந்தச் சொத்துகளைப் பரிபாலிப்போர் (Administrators)கள் நிர்வாகம் செய்துவருவார்களானால் நகர வாசிகளும், கிராமவாசிகளும், இதைவிட பதின்மடங்கு சுகப்பட்டு வாழ்வதற்குத் தடையிராது.

பொதுவுடைமை, உலகிற்குப் புதுவிஷயமல்ல. சிற்சில பெரிய சொத்துகளும் அரசாங்க வர்க்கத்தினரால் பொதுவுடைமையாக இன்றைக்கும் கையாளப்பட்டு வருகின்றன. கல்லூரிக்கட்டிடங்கள் [University buildings). சர்க்கார் கட்டிடங்கள், பெரிய கால்வாய்கள், (big canals), ஏரிகள், மடுவுகள், தந்தி தபால்கள், காடுகள், (Forests), சேனைகள், சிப்பந்திகள், ஆயுதங்கள் ஆகியவைகள் யாவும் பொதுச் சொத்துகளாகவே பாவிக்கப்பட்டும், உபயோகிக்கப்பட்டும் வருகின்றன. இந்தச் சொத்துகளின் வருமானங்களும், உபயோகங்களும் யாவருக்கும் ஏறக்குறைய பொதுவாகவே உபயோகத்திற்கு உதவும்படி இருக்கின்றன. சிற்சில உத்யோகஸ்தர்களுக்குச் சர்க்கார், முனிசிபாலிட்டி, தாலுக்கா ஜில்லாபோர்டு முதலியவைகளால் கட்டிக்கொடுத்திருக்கும் வீடுகள் பொதுவுடைமையாகப் பாவிக்கப்பட்டு, வாடகையாதொன்றுமில்லாமலே உத்தியோகம் புரியும் மக்களுக்கு உபயோகப்பட்டு வருகின்றன. இதே பிரகாரம் தனியுடைமைவாகப் பாவிக்கப்பட்டுவரும் சொத்தக்காரருடைய வீடுகள், பங்களாக்கள், தோட்டம் முதலியவைகளும் பொதுவுடைமையாக்கப்பட்டு, அவரவர் வசிப்பதற்குப் போதுமான அறை

கள் (apartments) வகுத்துக் கொடுக்கும் பட்சத்திலும், வீடு போதாமைக்கு இன்னும் பலகோடி வீடுகளைப் பொதுவாகக் கட்டுவித்தும், மற்றெல்லாவற்றையும் பொதுவாகப் பாவிக்கப்படும் பட்சத்திலும் என்ன கஷ்டம் நேரிடுமென்று கேட்கின்றோம்! ஐந்து இலட்சம் போர் வீரர்களுக்கும், இலட்சம் சேவகர்களுக்கும் தங்கி வாழ பொது வீடுகள் அமைக்கப்பட்டு இருக்கின்றபோது, வீடில்லாமல் தவிக்கும் 30 கோடி மக்களுக்குத்தங்கிவாழ என் பொதுவாக வீடு அமைக்கக்கூடாது இதேமாதிரியாகவே இரயில்களும், கப்பல்களும், தொழிற்சாலைகளும், பாங்குகளும் பொதுச்சொத்தாகப் பாவிக்கப்படும் பட்சத்தில், இவைகளில் கிடைக்கும் ஏராளமான திரவியம் சிறுபான்மையோராகிய மூதலாளிகளுக்கும், அவர்களுடைய பெரிய உத்தியோகஸ்தர்களுக்கும இலட்சலட்சமாகப் போகாமல், பெரும்பான்மையான பொதுமக்களுக்கு உதவுமன்றோ! இத்தியாதி பெரும்சொத்துகள் பொதுவுடைமை ஆக்கப்படின், தனிச்சொத்தாக அவைகள் இருக்கும் பொழுது அவைகளின்பேரில் ஏற்பட்டுள்ள கோடாகோடி கடன்களும் பொதுவாகத் தள்ளிவிடப்படுமன்றோ! எனவே பசிப்பிணியாலும், வேலையில்லாமையாலும், வாடிவதங்கும் கோடாகோடி மக்கள் கவலையற்றுச் சுகம் பெறவேண்டுமாயின், தனிச் சொத்துகளாகப் பாவிக்கப்படும் நிலம், நீர், தொழிற்சாலைகள், பாங்குகள், இரயில்கள், கப்பல்கள், டிராம்வேக்கள், மின்சார வசதிகள், பெரிய வீடுகள், கோவில் சொத்துகள், மதஸ்தாபனங்கள் ஆகிய யாவும் பொதுவுடைமையாக ஆக்கப்படவேண்டும். இக்கால இராஜ்யங்கள் மனிதனை ஆண்டு வருகின்றன. ஆனால் பொதுவுடைமை இராஜ்யத்தில், அதாவது சமதர்ம இராஜ்யத்தில், விளைபொருள்களும், செய்பொருள்களும் ஆளப்படுமென அறிக. அன்றுதான் மக்களைப் பிடித்தாட்டும் துக்கம் நிவர்த்தியாகுமென அறிக. ஆதலின் சமதர்மிகள் செய்பொருள், விளைபொருள் ஆகியவற்றை ஆளும் ஆட்சியைக்கைப்பற்றுவார்களாக!

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| புராணங்கள் | 0 | 8 | 0 |
| ராவணப்பெரியார் | 0 | 8 | 0 |
| புதுரஷ்யா | 0 | 8 | 0 |
| இந்தியாவின் குறைபாடுகள் | 0 | 8 | 0 |
| இரணியன் அல்லது இணையற்ற வீரன் | 0 | 8 | 0 |
| கர்ப்ப ஆட்சி | 0 | 6 | 0 |
| மதமும் லெனினும் | 0 | 6 | 0 |
| கடவுள் | 0 | 6 | 0 |
| மெய்ஞ்ஞானமுறையும், மூட நம்பிக்கையும் 2ம் பாகம் | 0 | 5 | 0 |
| பகுத்தறிவு அல்லது மரணசாஸனம் 2ம் பாகம் | 0 | 4 | 0 |
| பொதுவுடைமைத் தத்துவங்கள் | 0 | 4 | 0 |
| புராண ஆபாசங்கள் (தருமபரீட்சை) | 0 | 4 | 0 |
| மதப்புரட்சி | 0 | 4 | 0 |
| வால்டையரின் வாழ்க்கைச் சரிதை | 0 | 4 | 0 |
| சோதிட ஆராய்ச்சி | 0 | 4 | 0 |
| பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்) | 0 | 4 | 0 |
| பிரகிருதிவாதம் (ஈ. வெ. ரா) | 0 | 4 | 0 |
| மேல் நாடும் கீழ் நாடும் | 0 | 3 | 0 |
| பெண்கள் அலங்காரப் பொம்மைகளா? | 0 | 1 | 0 |
| காங்கிரஸ் திராவிடனுக்கு விண்ணப்பம் | 0 | 1 | 0 |
| சமதர்ம கீதம் | 0 | 1 | 0 |

கிடைக்குமிடம்:-

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| பெரியார் பெருந்தொண்டு | 0 | 6 | 0 |
| மறுப்புக்கு மறுப்பு | 0 | 3 | 0 |
| பெண்ணுரிமையும் மதமும் | 0 | 3 | 0 |
| மநுநீதி விளக்கம் | 0 | 3 | 0 |
| அப்பரும் திருஞான சம்பந்தரும் | 0 | 3 | 0 |
| இராமாயணப் பாத்திரங்கள் | 0 | 3 | 0 |
| கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? | 0 | 3 | 0 |
| இனிவரும் உலகம் | 0 | 2 | 0 |
| மதம் என்றால் என்ன? | 0 | 2 | 0 |
| சோஷியலிசம் | 0 | 2 | 0 |
| உழைப்பாளிகளுக்கு ஏன் இவ்வுலகமில்லை | 0 | 2 | 0 |
| இந்தி எதிர்ப்புப் பாடல் | 0 | 2 | 0 |
| திராவிடர்-ஆரியர் உண்மை | 0 | 0 | 6 |
| இந்திப் புரட்டு | 0 | 0 | 6 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0 | 2 | 0 |
| இதிகாசங்கள் புகட்டும் நீதி | 0 | 2 | 0 |
| திருச்சி பொதுப் பிரசங்கம் | 0 | 2 | 0 |
| உண்மைத் தொழிலாளி யார்? | 0 | 2 | 0 |
| ஜஸ்டிஸ் கட்சிக்குக் கிராக்கி புதுக்கட்சியா? | 0 | 1 | 0 |
| தமிழ் இசை, நடிப்புக் கலைகள் | 0 | 1 | 0 |
| மாணவர்களும் பொதுநலத்தொண்டும் | 0 | 0 | 6 |

கிடைக்குமிடம்:

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.